


Feb 2025 FB Posts

Pattabi's FB posts

pattabi raman | 4/18/25 | FB Posts

Feb 2025 FB Postings

feb 1 2025

so wrote Reginald Reynolds in his 1939 write up ‘ The Fool of God’

Here the fool of god is Gandhiji as narrated by Reginald.

Quoting Kabir

“ The warrior fights for few hours but truth seeker’s battle goes on day and night, as long as life lasts, it never ceases..”

“ If your bonds be not broken whilst living, what hope of deliverance in death?

It is but an empty dream that the soul shall have union with Him because it has passed from the body

If He is found now, He is found then, if not , we do but go to dwell in the City of Death”

“The fools of God believed in voluntary poverty, in self respect and self knowledge. Their God was the inner guru, the Man of the Heart.”

“ Our familiar measures may often prove deceptive when human wisdom sits in judgement over the Fools of God.

A goldsmith has come into the garden

He would appraise the Lotus, for sooth,

By rubbing it on his touchstone

Judged by the standard of the goldsmith, the lotus was valueless

(நம்நாட்டில் தான் இப்படி ரெஜினால்ட் பேசும் கடவுளின் முட்டாளை மதிப்பிட எவ்வளவு பொற்கொல்லர் பெருமார்கள்..வாழ்க)

feb 2 2025

ஆசை யாரை விட்டது. பொருளாதாரமே தெரியாத நானும் ஆண்டுதோறும் நிதியமைச்சர் பேசுகிற உரைகளை கேட்பது வழக்கம். புரியுதோ, புரியலையோ கேட்டு வைப்பது மரபு. அதுபோல் 'கருத்து கந்தனாக' கொஞ்சம் சொல்லி வைப்பதும் உண்டு. தொலைக்காட்சி வருவதற்கு முன்னரெல்லாம், இந்து நாளிதழ் முழு பட்ஜெட் உரையையும் வெளியிட்ட காலமுண்டு. அதை படிக்க பல மணி செலவிட வேண்டியிருக்கும். இப்போது உரையை 80 நிமிடங்களில் கேட்டு விடலாம்.

அவ்வப்போது நிலவும் அரசியல் அவசியங்கள், பொருளாதார நெருக்கடிகள், சமூக பதட்டங்கள் என எதில் கூடுதல் நிர்ப்பந்தம் என ஆட்சியாளர் உணர்கிறார்களோ அதனை பட்ஜெட் பொதுவாக பிரதிபலிக்கும். இம்முறை டெல்லி, பீகார் தேர்தல் அரசியல் அவசிய நிர்ப்பந்தத்தை பட்ஜெட் பிரதிபலிப்பதைக் காணலாம்.

பொருளாதார மேதைகள் வெவ்வேறு திசைகளில் கருத்துக்களை சொல்லி வருகின்றனர். அவர்கள் கவலையெல்லாம் 2047 ல் , அதாவது விடுதலையின் நூற்றாண்டில் இந்தியா வல்லரசு ஆகுமா- வளர்ந்த நாடாகுமா, ஆகாதா என்பது. அதற்கான 'பெட்' கட்டி அவர்கள் 'டிபேட்' ஆடுகின்றனர். இவர்களை விட்டால் நமக்கு சொல்லிக்கொடுக்க நாம் மலை போல் நம்பக்கூடிய நமது அரசியல் தலைவர்கள்- தொண்டர்கள், அமைப்பு தலைவர்கள்- தொண்டர்கள், வாட்ஸ் ஆப் அறிஞர் பெருமக்கள்தான். இவர்கள் அரசியல் positionக்கேற்ப கருத்தை வெளியிட்டு சொல்லித்தருவார்கள்.

முழுமையாக ஆவணங்களை படித்துவிட்டுத்தான் சொல்ல வேண்டும் என இந்தியர்களாகிய நாங்கள் ஒருபோதும் நினைத்தது கிடையாது. அதற்கெல்லாம் அவ்வளவு நேரம் எங்களால் செலவிட முடியாது. யார் முதலில் கைதட்டுவது அல்லது சொல் எறிவது என்கிற போட்டியில் சளைக்க மாட்டோம்.

பிரதமர் திரு மோடி பட்ஜெட் 'லட்சுமி கடாட்சம்'- சுபம் பொங்குவதாக சொல்லியுள்ளார். எதிர்கட்சி தலைவர் திரு ராகுல் குண்டடி புண்ணுக்கு band aid எனச் சொல்லியுள்ளார். அவரவர் அரசியல் விசுவாச நிலைப்பட்டையொட்டி -சபாஷ் கைதட்டல்களோ, ஒன்றுமே இல்லை புஸ்வான வாணவேடிக்கை - என்ற விமர்சன உஷ்ணம் வரலாம்.

மத்தியதர வர்க்கத்திற்கு சலுகை என்றும், சலுகை பெறும் அந்த 3 கோடி மக்கள்தான் இந்தியாவா, அடித்தட்டு 40 கோடிக்கு ஏதுமில்லை என்ற விமர்சனமும் வந்துள்ளது.

இனி கணக்கு வழக்குகளை கொஞ்சம் பார்க்கலாம்.

மத்திய அரசாங்கம் 2025-26க்கான செலவு மதிப்பீடாக 5065345 கோடி வைத்துள்ளது. இதில் 25 சதம் வரி கட்டும் செலவாக சொல்லப்பட்டுள்ளது. வருவாய் 3496409 கோடியாக அமையலாம். வருமான வரி பற்றி ஏராளம் சொல்லிவிட்டனர். புதிய வரி ராஜ்யம் இனி அது ஒன்றே ராஜ்யம் என்கிற நிலை உருவாக்க முயற்சித்துள்ளதாக விவரம் அறிந்தோர் சொல்கின்றனர்.

முதலீட்டு செலவில் தேக்கம் என குற்றச்சாட்டு வந்துள்ளது. ஒதுக்கிய நிதியையே ஏன் செலவு செய்யாத்க திறமையின்மை என்கிற கேள்வியும் எழுந்துள்ளது. பங்கு விற்பனை charm இல்லையா - சென்ற ஆண்டைவிட இம்முறை குறைவான target 47000 கோடி என ஆக்கியுள்ளனர். கடந்த 5 ஆண்டுகளாக disinvestment target எடுபடவில்லை என்பதும் செய்தி.

கடன் இல்லா வருவாயை வரிகள் வழி 11 சதம் உயர்த்த முடியும் எனச் சொல்லியுள்ளனர். அரசின் வரி வருவாயிலிருந்து மாநிலங்களுக்கு 1422444 கோடி ஒதுக்க முடிவெடுத்துள்ளனர். வருவாயில் கார்ப்பரேட் வரி மூலம் 1082000 கோடியும், வருமான வரி மூலம் 1438000 கோடியும், ஜி எஸ் டி மூலம் 1178000 கோடியும், கஸ்டம்ஸ் மூலம் 24000 கோடி, எக்சைஸ் வரி 317000 கோடி பெற்று, இதிலிருந்து தான் 1422444 கோடியை மாநிலங்களுக்கு பிரித்து தர உத்தேசித்துள்ளனர். இம்முறை சென்ற ஆண்டைவிட 10.5 சதம் கூட தருகிறார்களாம். கடனாக 1569527 கோடி என்பது மலைக்க வைக்கும் நம்பர்.ஜி எஸ் டி வரியில் 14 சதம் செஸ் மூலம் பெறுகிறார்கள். இதன் மீது மாநிலங்களுக்கு கோபமுண்டு.

மத்திய திட்டங்களுக்கு 1621899 கோடி என்றும், sponsored எனில் 541850 கோடி செலவு என்கின்றனர். ஜல்ஜீவன், ஆவாஸ் யோஜனாவை குறைத்துள்ளனர்.

எங்களைப் போன்ற பென்சனருக்கு ஆகும் செலவு ஒதுக்கீடு 276618 கோடி. இதில் கொஞ்சம் உயர்ந்து காணப்படுவது விலைவாசி உயர்வால் உருவாவது. செலவு மதிப்பீடான 5063345 கோடி , அமைச்சகவாரியாக பிரித்து சொல்லப்பட்டுள்ளது. வழக்கம் போல பாதுகாப்பு ஆக உயர் 681210 கோடியையும், கல்வி பாவம் 128650 கோடி,

இளைத்த ஹெல்த் 99859 கோடியையும் பெறுகிறது. இந்த இரண்டும் உயர்ந்தால்தான் நாட்டின் ஆரோக்கியம் உயரும் . விவசாயம் என பலமுறை பட்ஜெட் உச்சரிப்பு இருந்தாலும் ஒதுக்கியிருப்பது 137757 கோடி, சென்ற பட்ஜெட் விட குறைவு. ரயில்வே மாற்றமின்றி அதே அளவான 255445 கோடியையும், சாலை போக்குவரத்து 287333 கோடியையும் பெறுகின்றன.

மான்யங்களுக்கான செலவு 426216 கோடி. இதில் உணவு மான்யம் 203420 கோடி, உர மான்யம் 167887 கோடி. சமையல் எரிவாயு பாவம்12100 கோடிதான். சென்ற பட்ஜெட் விட 12 சத வெட்டு.

மிக முக்கிய மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பில் மாற்றமில்லை- அதே 86000 கோடிதான். எஸ் சி திட்டத்தில் 21.8 சதம் உயர்த்தி 168478 கோடியும், எஸ் டி க்கு 19.8 சதம் கூடுதலாக்கி 129250 கோடியும் ஒதுக்கியுள்ளனர். பெண்கள் நலன் என்பதில் 19.3 சதம் உயர்த்தி 449029 கோடி என்று காட்டியுள்ளனர். வடகிழக்கு பகுதிக்கு 20.6 சதம் உயர்த்தி 105833 கோடி எனச் சொல்லியுள்ளனர்.

அந்நிய முதலீடு காப்பீட்டு துறையில் 100 சதம் என்பது விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது. சிபிஎம் விமர்சனம் “cruel betrayal of the requirements of the people of India, even the 12 lakh tax exemption is only for 1 % of population- budget reflects the bankruptcy of Modi Government “.

கோடானு கோடி தினக்கூலிகளுக்கும், முகம் தெரியா ஊரகவாசிகளுக்கும் பலனளிக்குமா, அவர்கள் தேர்தலின் போது எண்ணிக்கையாக தெரிகிறவர்கள் மட்டுமா என்கிற நெறி சார்ந்த கேள்விக்கு ஆட்சியாளர் நேர்மையாக விடை காண வேண்டும்.

பட்ஜெட் நாட்டின் பொருளாதார சமூக நலன் காட்டி- அது வெறும் அரசியல் ஆதாயம் என சுருக்கப்படாத ஆரோக்கியம் எப்போது வருமோ?

‘நானும் ரௌடிதான் ‘ என்கிற எண்ணத்தில் பட்ஜெட் பற்றி அரைகுறையாக தெரிந்துகொண்டு எழுதியாகிவிட்டது. அவ்வளவுதான்.

2-2-2025

Feb 4 2025

ரா அ பத்மநாபன் பாரதி ஆய்வாளராக கொண்டாடப்பட்டு வருபவரில் முக்கியமானவர். அவர் கடுமையாக உழைத்து 1957ல் வெளிவந்த 'சித்திர பாரதி' பாரதியாரின் சிறந்த பல்வேறு அரிய படங்களுடன் வந்த சரிதையாக இன்றும் பார்க்கப்படுகிறது.

அதேபோல் ரா அ ப எழுதிய V V S Aiyar என்கிற NBT, 1980 நூலும் மிக முக்கிய வவேசு சரிதையாக பார்க்கப்படுகிறது. வவேசு குறித்து TSS ராஜன் எழுதிய சிறு நூலும், பெ சு மணி நூலும் கூட , வவேசு பற்றி பேசும்போது குறிக்கப்படுகின்றன. வவேசு வை வெறும் சேரன்மாதேவி குருகுல சர்ச்சை என்கிற சிறுமைக்குள் இட்டு தாழிட்டபொது புத்தி சூழலில், மேற்கூறிய நூல்கள் , வவேசு குறித்து சற்று balance பார்வையை உருவாக்கக்கூடியவைகளாக அமையும்.

வவேசு விமர்சிக்கப்பட்ட அளவு, திராவிட இயக்கத்தாரால் கூட பாரதி விமர்சனக் கணைகளை பெறவில்லை. விமர்சனமவ இல்லவே இல்லை எனசவ சொல்லவில்லை. அவரது சரிதை குறிப்புகள் நூற்றாண்டாக சிறிது சிறிதாக , அவ்வப்போது பலரால் வெளியிடப்பட்டு, தமிழர் அறிந்து கொள்ள செய்யப்பட்டு வந்தாலும், அவரது கவிதை, கதை, கட்டுரைகள், பத்திரிகை பணிகள் என தொகுக்கப்பட்டதற்கு கொடுக்கப்பட்ட உழைப்பை ஒப்பிடும்போது, அவர் வாழ்வின் இண்டு இடுக்குகளுடன் , இழை பிரியாத 'பாரதியார் சரிதம்' ஏதாவது இருக்கிறதா என நான் அறியவில்லை. பாரதி A to Z என அவர் வாழ்வின் 39 ஆண்டுகள் குறித்து இடைவெளியற்ற சரிதம் ஏதாவது பின்னப்பட்டிருக்கிறதா எனத் தெரியவில்லை. பொதுவாக அவரது சரிதைகளை critical appreciation வகைப்பட்டு பார்க்க முடிவதில்லை.

பெரியார், அம்பேத்கர் சரிதங்களில் நான் ஏராள இடைவெளிகளை உணர்கிறேன். பாரதி குறித்து நான் படித்தவை வெகு சொற்பம் என்பதால் கூட எனக்கு இந்த 'இழை பிரி- இடைவெளி' உணர்வு வரலாம். மார்க்ஸ், காந்தி, அம்பேத்கர், பெரியார் அளவிலான 'பாரதி வாசிப்பு' என்னிடம் இல்லை என்ற குறையை நான் உணராமல் இல்லை.

பாரதி சரிதம் குறித்த சில நூல்களை வாசித்த அளவில், செய்திகளின் இடைவெளியை, வேறுபட்டு சொல்லப்படுதலைக் காண்கிறேன். குறிப்பாக 'இந்தியா பத்திரிகையில் ' அவர் நின்றது குறித்து'. நாகசாமி சொன்ன தகவலை அதற்கு முன்பு பாரதி சரிதம் எழுதிய எவரும்

குறிப்பிடாமல் செல்கின்றனர். நாகசாமி சொன்னதை புதுவையில் தேசபக்தர்கள் பற்றி எழுதிய பதிவில் தெரிவித்துள்ளேன்.

1957 ரா அ ப சித்திரபாரதி authorised biography என்கிற தகவலுடன் வந்த ஒன்று. அவர் வாழ்ந்த காலத்தில் பின்னாட்களில் அவரை சந்தித்து நூல் எழுதிய சலபதி அவர்களும் இந்தியா பத்திரிகை தகராறு (உள் தகராறு) இருந்த செய்தியை பெற்றுள்ளார். ஆனால் 1957 ல் authorised biography என்று சொல்லப்பட்ட ஒன்றில் , நாகசாமி சொன்ன தகராறு- ஹரிஹர சர்மா, பாரதி விலகல் காணப்படவில்லை. நாகசாமி பாரதி தகராறுக்கு பின்னர் மீண்டும் 'இந்தியா' வில் சேர்ந்த மாதிரி சொல்லவில்லை. விஜயாவில் சென்றதாக செய்தி போகிறது. சலபதி போன்றவர் தோழர் சி எஸ் எஸ் தகவலாக மீண்டும் பாரதி 1909 அக்டோபரில் சேர்ந்ததாக பதிவிடுகிறார். அப்படியானால் 1909 ஜூலை, செப்டம்பர் பத்திரிகை செய்திகளை பாரதி கணக்கில் வைக்க முடியுமா என்கிற கேள்வி எழுகிறது.

நான் பாரதி, வவேசு ஆய்வு மாணவனல்ல. என் புரிதலில் இடைவெளிகள் , போதாமை ஏராளம் இருக்கின்றன. படித்த அளவில் எழுந்த கேள்விகளே இவை.

அதே போல் வவேசு நூலிலும் கேள்விகள் உள்ளன. குருகுலம் போஜன பாகுபாடு பெரிதாக்கப்பட்ட செய்தியை ரா அ ப அவரது ஆங்கில நூலில் தனி இயலாக, ஓரளவிற்கு விரிவாகவே பேசியிருப்பார். காந்தியின் விளக்கத்தை யங் இந்தியாவை சுட்டிக்காட்டி ஆதாரத்துடன் ரா அ ப சொல்லியிருப்பார். ஆனால் வவேசு காங்கிரஸ் கமிட்டி கடித பரிமாற்றங்கள், வவேசு பதில் எனத் தேடினால் முழுமையாக அதில் கிடைக்காது. இது மாதிரியான சர்ச்சைகளில், கிடைக்கப்பெறும் ஆவணங்களை அப்படியே பிற்சேர்க்கைகளாகவாவது கொடுக்கக்கூடாதா என்றே எனக்குத் தோன்றும். வவேசு நாயுடு , பெரியார் , ராஜாஜி, ராஜன் , சம்ஸ்கிருத அறிஞர் சாஸ்திரி , காந்தி எனப் பல பெரியவர்கள் தொடர்புடைய ஒரு விஷயமிது.

எத்தனை மாணவர்கள் இருந்தனர் , அதில் இரு பிராமண பையன்கள் மட்டுமா தனி போஜனம், வேறு பிராமண பையன்கள் அனைவருடனும் ஒரே பந்தியா, அன்றைய 'ஹரிஜன' குழந்தைகள் இருந்தனரா, இருந்தால் அவர்கள் எப்படி நடத்தப்பட்டனர் , சேரன்மாதேவி போல, 1920 களில் காங்கிரஸ் உதவி பெற்ற வேறு ஆசிரமங்கள் இருந்தனவா- அங்கு நிலைமை எப்படி , திராவிட மாணவர் விடுதியில் நிலைமை என்ன , அதை ஆரம்பித்தவர்கள் ஹரிஜன சேர்க்கை வைத்திருந்தனரா

- என பல கேள்விகள் எழுகின்றன. இதில் , பழ அதியமான் நூலை நான் படிக்கவில்லை என்ற குறையுண்டு. ரா அ ப எழுதிய ஆங்கில நூல், வவேசு தண்டிக்கப்பட்டுவிட்டாரோ, அவரின் பல மேன்மைகளை , போராடியவர்கள் கணக்கில் கொள்ளவில்லையோ என்கிற உணர்வையே வெளிப்படுத்துகிறது.

காந்தியிடம் போனதில் ஒன்று புலப்பட தொடங்கியது. அவர் சொன்னது நெற்றிப் பொட்டில் அடித்தது போன்று

' I love those who preaches not ' அவர் செயல்வழி செய்தி தந்தவர். மற்ற பல தலைவர்களின் வாழ்க்கை அனுசரிப்புகளுக்கும் அவர்களின்

பேச்சு எழுத்துக்களுக்கும் உள்ள இடைவெளி பொதுவாக கேள்விக்கு அப்பாற்பட்டவையாக பார்க்கப்படுகின்றன. ஏனெனில் அவர்கள் அந்தந்த 'sectional empowerment Rights oriented' நிலைப்பாட்டை எடுத்து தங்களை நிலை நிறுத்திக்கொண்டவர்களாக இருக்கின்றனர். அங்கெல்லாம் சமூக அரசியல் பொருளாதாரம் என்கிற அம்சங்கள் தான் தூக்கி நிற்கும். Morality என்பது விவாதமாகாது.

இந்த right oriented என்பதில் பல்லாண்டுகள் பயணித்த அடிமட்டக்காரன் என்கிற அனுபவத்தையும் சேர்த்தே இதை நான் பேசுகிறேன்...

4-2-2025

feb 6

சப் கோ சன் மதி தே பகவான்

இறையே எங்கள் அனைவருக்கும் நல்ல புத்தியை அருள்வாய்

திருப்பரங்குன்றம் அமைதி பெறட்டும். தமிழகம் தாயும் பிள்ளையுமாக அனைவரையும் வாழ வைக்கட்டும். நல்வழக்கமான சகோதரத்துவம் நிலவட்டும்.

அமைதி கெடுப்போர் மிகச்சிலராக தனிமையாகட்டும்

மதமானாலும் அரசியலானாலும் நெறி நிலை பேணட்டும். அவரவர் இறை அவரவர்க்கு. மதிப்போம் மாண்புறுவோம்.

மக்களுக்கு ஏராள துயர்களும் துன்பங்களும் பேசப்பட , நியாயம் பெற இருக்கின்றன. தீர்ப்பதாக நினைக்கும் இறையையே துயராக துன்பமாக மாற்றாமல் இருப்போம்.

இறைக்கு சக்தி இருப்பதாக கருதும் நாம், அவருக்கான சக்திக்கு போராடவேண்டுமா..அவர் தூணிலும் துரும்பிலும் மலைகளிலும் தன்னை பார்த்துக்கொள்வார்.

மக்களின் அன்றாட பிரச்சனைகளின் புலம்பலுக்கான ஆன்ம வடிகாலான இறை பக்தியை , கூட்டமாக தூர் எடுக்க வேண்டாம். அந்த ஆன்ம பலம் , இறை பலம் 'கும்பல் வழி ' அமைதி பெறாது. நம்பிக்கையின் கூட்டம் என்பது போர் முழக்கமல்ல. அதன் அடிப்படையே அன்பு வழிதான்.

கடவுளே காப்பாற்று எனச் சொல்லும் ஏராளமானவரை, கடவுளை காக்க வாரீர் என அழைக்கா ஊர்கள் உருவாகட்டும்

மன அமைதிக்குத்தான் மதமும் இறையும். இறை நம்பிக்கை மன பதட்டத்தை தணிக்கவே, சமுக பதட்டத்தை உருவாக்க அல்ல.

சப் கோ சன் மதி தே பகவான். இறையே அல்லாவே ஏசுவே எங்களுக்கு நல்வழி காட்டுவீர். தங்கள் பெயரால் பதட்டம் உருவாக்காத அமைதி வழி நடத்துவீர்

6-2-2025

feb 7

ஆவணமும் அரிச்சுவடி பாடமும்- தோழர் குப்தா school of thought

பட்ஜெட் குறித்த தலையங்கங்கள், விமர்சன அலசல்கள், ஆர்ப்பாட்டங்கள்- அதனை விதந்தோதும் பேச்சுக்கள் இன்னும் சில நாட்களில் முடியலாம்.

விடுதலை இந்தியா கடந்த 75 ஆண்டுகளாக பட்ஜெட் விவாதங்களை ஆண்டுதோறும் சில நாட்கள் நடத்திக்கொண்டிருக்கும் பழக்கம் வைத்திருக்கிறது. ஆளும் கட்சி 'சிறப்பா' செய்துவிட்டோம் எனவும், எதிர்கட்சி எவ்வளவு பலவீனமாக இருந்தாலும் 'ஏதுமே இல்லை ' என்கிற இயக்கங்களையும் கடந்த பல ஆண்டுகளாக நடத்தி வருவதையும் காண்கிறோம்.

இதுவரை ஒரு மாடல் பட்ஜெட் கூட இந்தியர் எவரும் பார்க்கவில்லையா- இருந்தால் அதன் தன்மை என்ன? வகை தொகைகள் என்ன? பாராளுமன்றத்தில் பங்கேற்பு என்கிற வரைதான் consensus ஆ? பாராளுமன்ற விவாதங்கள் கருத்தொற்றுமைக்கானதல்லவா என்கிற புரிதல் ஆளும்- எதிர் கட்சிகள் மத்தியில் பலப்படாதா?

நீ தவறு- அன்று நீ செய்ததைவிட நான் கொடுமையா செய்து விட்டேன் என்கிற மாதிரியே விவாதங்கள் நடைபெற்று வருவதைக் காண்கிறோம். அவனை நிறுத்தச் சொல், நான் நிறுத்துவது இருக்கட்டும் என்பதே பெரும் இரைச்சலாக எங்கும்.. ஆமாம் இதை நான் செய்திருக்க வேண்டியதில்லை, இனி செய்ய மாட்டேன் என்கிற துவக்கத்தை செய்திடும், அல்லது இனி இப்படி செய்கிறேன் என்கிற exemplary politics க்கான சாலையை நாம் ஒவ்வொருவரும் உருவாக்க இயலுமா? பட்ஜெட்டில் மட்டுமல்ல, அன்றாட அனுசரிப்புகளிலும்...

கட்சிகள் தங்களுக்கான பட்ஜெட் டிபார்ட்மெண்ட் ஒன்றை வைத்திருக்கிறார்களா (காங் உட்பட) எனத் தெரியவில்லை. நிழல் காபினட் எனச் சொல்லத் தகுந்த செயல்பாட்டை வெளித்தெரிய உணர முடிவதில்லை. துறை சார்ந்த நிபுணத்துவ தேர்ச்சியை , சட்டமன்ற , நாடாளுமன்ற அனுபவம் கொண்டவர்களை மய்யமாக வைத்து கட்சிகள் தங்கள் புரிதலை ஜனநாயக அரசியலில் கட்ட வேண்டியிருக்கும்.

கட்சிக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு , அரசாங்கம் என்கிற நிர்வாகம் எப்படி செயல்படுகிறது என நேரிடை அனுபவம் பெற வாய்ப்பிருக்கிறது. நாடாளுமன்றம் சார்ந்த resources ஏராளம்

கொட்டிக்கிடக்கிறது. அவைகளை ஆய்ந்து மக்கள் மொழியில் authenticated ஆக அரசாங்க விவரங்களுடனேயே எதிர்கொள்ளும் அரசியல் வாய்ப்பும் அவர்களுக்கு இருக்கிறது. அங்கு விவாதத்தின் போது பலர் பொத்தாம் பொதுவான மேடை அரசியல் பேசிவிட்டு , கடமை முடிந்ததாக நினைத்துப் போவதைக் காண முடிகிறது. ஆழமில்லாமல் இருப்பது , போதாமை குறித்த மன உறுத்தல் ஏதும் தொந்தரவு செய்யாதா?

என் போன்ற பாமரர்களுக்கு trust boost கிடைக்காமல் ஏமாற்றமே கிடைக்கிறது. நான் ஓரளவாவது தெரிந்துகொள்ளாமல், மேடை ஏறி எனது அறியாமையை பரப்புவது என்பதும் கூட எனக்கான நெறிசார்ந்த கேள்வியாகிறது. எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள எவராலும் முடியாது என்றாலும், எதையும் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லாமலேயே வாயடிப்பது என்பதும் அரசியல் சமுக பிரச்சனையே.

வரவு இன்ன வகையினங்களில் வருகிறது..இந்த வகையினங்களில் சாதாரண மக்களை கசக்காதே, அதை இந்த அளவு குறைத்து வேறு வகையினத்தில் பெறு என்பதை - அரசாங்க விவரங்களிலிருந்தே சொல்லவேண்டும். அதன் பக்க விளைவுகள் இப்படி வரலாம், அதை இப்படி தடுத்து மேலாண்மை செய்யலாம் எனச் சொல்ல வேண்டும். அல்லது தங்களிடம் ஆதாரபூர்வ மாற்று விவரங்கள் இருந்தால் வெளிப்படுத்த வேண்டும்.

செலவினங்களில் இன்ன வகையினத்திற்கு இவ்வளவு எதற்கு, இன்ன வகையினத்தில் கூடுதல் தேவை எனச் சொல்லி, அதன் விளைவுகள் இப்படியிருக்கலாம் எனச் சொல்லும்போது, ஆக்கபூர்வ அரசியல் விவாதங்கள் உருவாகலாம். அரசியல் கேடர்களின் புரிதலை, பக்குவ வளர்ச்சியை உருவாக்கலாம்.

பற்றாக்குறையை எவ்வளவு குறைக்கலாம், கடன்களை வட்டியை எவ்வளவு குறைக்கலாம். எந்த கடனால் அரசியல் சமுக பிரச்சனைகள் மிகலாம், குறையலாம் என்கிற பார்வையும் வெளியாதல் நல்லது.

ஓர் ஆவணத்தை எவர் கொணர்கிறார் என்பதை எப்போதும் முன்முடிவை வைத்துக்கொண்டு, முன் கூட்டியே அதன் தீர்ப்பை எழுதாதே என்கிற அரிச்சுவடி பாடத்தை 'தோழர் குப்தா பள்ளி' எங்களுக்கு சொல்லிக்கொடுத்தது. பிள்ளை பெறு முன் பெயர் வைக்காதே என்கிற பழைய மொழிதான் இது. ஒருவர் சொல்வது குறித்து தகுந்த ஆதாரங்களுடன் உனக்கு மறுப்பு கிடைக்கும்வரை,

அவர் சொல்வதை நம்புவது என்பது இயல்பே என காந்தி கற்றுத் தருகிறார்.

1980 களின் இறுதியோ அல்லது 1990 களின் துவக்கமோ நினைவில்லை. டெலிகாமில் சரீன் கமிட்டி வந்தபோது, மார்க்சிஸ்ட் கட்சித் தோழர்கள் எரிப்பு போராட்டத்தை நடத்தினர். தோழர் குப்தா ஆவணத்தை holistic ஆக முழுமையாக பார்த்து கொள்ளக்கூடியதை சொல்லி, தொடர்ந்து விவாதித்து போராடி மாற்ற வேண்டியதை விளக்கி, அரிச்சுவடியை அளித்தார். நல்லவையையும் முன்னேற உதவும் அம்சங்களையும் கோபத்தில் பொசுக்க வேண்டாம் என எடுத்துரைத்தார். Accept what is given, learn to fight the improvement of the rest என்பதை அவர் வெளிப்படுத்தினார். கொடுப்பதைப் பெற நாங்கள் பிச்சைக்காரர்கள் அல்ல என மாறுபட்டவர் முழங்கினர். அதையும் குப்தா எதிர்கொண்டார்-beggars cannot be choosers - but we are choosers என்றார். காந்தியும் something is given, if it hurts people, fight to set things right , non violently எனச் சொல்லித் தருகிறார்.

எந்த மோசமான அரசாங்கமும் மக்களின் நலன் என்பதை நூறு சதமும் ஒதுக்கிவிட்டு அரசாங்கத்தை நடத்த முடியாது. நூறு சத மக்களுக்கும் நூறு சதம் நல்லதை மட்டுமே தந்த அரசாங்கம் என ஏதும் உருவாகவும் முடியாது. அன்றைய சோவியத் சோசலிச அரசும், இன்றுள்ள சீன அரசும் கூட செய்ய முடிந்ததில்லை . நூறு சத மக்களுக்குமான நூறு சத நலன் - எல்லோருக்குமான அரசாங்கம் என்பது idealism . அரசாங்கம் சாரா , மக்களின் முயற்சியுடன் காந்தி சர்வோதயா என கட்டுமான சோதனை செய்து பார்த்தார். அவரும் சொன்னார் idealism என்பது இலக்குதான் என்று. அடைந்தால் idealism என ஏதுமிருக்காதென்றார்.

What is morally wrong cannot be politically right என்கிற பாடத்தை காந்தியிடம் தோழர் குப்தா கற்று இருக்கலாம். Let our political reading be there, but let it add moral strings also.

7-2-2025

feb 8

No confusion of happiness with possession, or victory with Success- that is Gandhi- E M Forster

இலக்கியத்தின் வரலாறா அல்லது இலக்கியத்திற்கு வரலாறா என்கிற கேள்வியை 'இலக்கிய வரலாறு' என்கிற சொற்றொடர் எழுப்பினாலும் , அதை ஆங்கில சொற்றொடரான History of Literature என்பதுடன் பொருத்தி இலக்கியத்தின் வரலாறு என பொருள் கொள்ள அறிஞர் டாக்டர் கார்த்திகேசு சிவத்தம்பி சொல்லித்தருவார்.

மற்றொரு சொற்றொடர் Literary History என்பதானது..சமுகம் ஒன்றின் வரலாற்றை அச்சமூகத்தின் மொழி சார்ந்த இலக்கியங்களின் வழியிலே கட்டமைத்தலை சொல்கிறோம். அதாவது இலக்கிய வரலாற்றை சமுக வரலாறாக இழையெடுத்து நெய்வது என புரிந்துகொள்ளலாம்.

இந்த தமிழ் இலக்கிய வழியில் பண்பாடு குறித்த வரலாற்றையும், பிற பண்பாடுகள் ஊடாடி , தமிழின் அன்றாட பேச்சு இன்னும் அனுசரிப்புகளில் வந்து அமர்ந்ததையும் (தமிழ் இப்படி பிற பண்பாடுகளில், பிற தமிழ் பண்பாடு மற்றும் மொழியில்) விளக்கும் எளிய நூலாக அறிஞர் தெ பொ மீனாட்சி சுந்தரனார் அவர்கள் எழுதிய ' தமிழும் பிற பண்பாடும்' அமைந்துள்ளது. எவரும் எளிதாக படித்துவிடக்கூடிய சிறு நூல்தான். என் சி பி எச் வெளியிட்டு 50 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது.

" தமிழிலும் ஏனைய பாரத நாட்டு மொழிகளிலும் காணப்படுகிற பக்திப் பண்பாட்டுத் தொடர்பை இந்நூல் செவ்வனே விளக்குகிறது" என இதற்கு ஆய்வறிஞராக வாழ்ந்த மயிலை சீனி வேங்கடாசாமி ஏப்ரல் 1973ல் முன்னுரை எழுதியிருக்கிறார். ஆசிரியர் தெ பொ மீ ' ஆன்மீகத்தை வற்புறுத்துவதே இந்தியப் பண்பாட்டின் சிறப்பு நிலையாகும். இங்கு ஆன்மீகம் என்பது அகத்திலே அகம் என்கிற பொருளில் ஆசிரியர் பேசுகிறார். அன்பு நெறி என நாம் சுருக்கி அல்லது விரித்து எடுத்துக்கொள்ளலாம்.

' பழங்கால தமிழர் வாணிகம்' என்கிற மற்றொரு நூலும் Literary History என்கிற தன்மை சார்ந்து எழுதப்பட்ட ஒன்றே. கிமு 2 ஆம் நூற்றாண்டு- கிபி 2 ஆம் நூற்றாண்டு காலத்திற்கான தமிழர் பிறருடன் நடத்திக்கொண்ட வாணிபம் குறித்த வரலாற்று ஆய்வை மயிலை சீனி

வேங்கடசாமி செய்துள்ளார்.இந்நூலும் வந்து 50 ஆண்டுகள் ஆகிவிட்டது. என் சி பி எச் கொணர்ந்தனர்.

சங்க காலத்து நூல்களை மய்யமாகவைத்து, யவனர்களான தாலமி, பிளைனி குறிப்புகளை துணைக்கு வைத்து இந்நூலை மயிலை உருவாக்கியிருக்கிறார். இலக்கியங்கள் வழியில் பண்டமாற்று, வாணிபப் பொருட்கள், கடல் மார்க்கம்- தரை மார்க்கமாக நடந்தவை, பண்டைய துறைமுகப் பட்டினங்கள் , அங்கு வாழ்க்கை குறித்து மயிலை இந்நூலில் தரவுகளை சேர்த்து சொல்கிறார். இந்நூலும் எளிய நூல்தான்.

டாக்டர் சிவத்தம்பி எழுதிய நூல் 'தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும்'. முன்பே இணையத்தில், முகநூலில் இந்நூல் பற்றி கொஞ்சம் சொல்லியிருந்தேன். 40 ஆண்டுகளுக்கு முன்னர் என் சி பி எச் வெளியிட நூல். முக்கிய நூல்களில் ஒன்றெனலாம். இதில் சிவத்தம்பி முக்கிய கருத்தாக்கம் ஒன்றை தந்திருப்பார்.

இந்நூலில் " இலக்கியமும் மதமும் ஒன்றுக்கொன்று புறம்பானவையாகவும், ஒன்றிலிருந்து ஒன்று மாறுபட்டவையாகவும் காட்டப்படவே இல்லை. மதத்துக்கு இலக்கியம் அவசியமென்பதும்,

அதாவது இலக்கியமில்லாது மதம் நின்று நிலைக்க முடியாது என்பதும்- மதமில்லாது, குறிப்பாக நவீன யுகத்துக்கு முற்பட்ட கால இலக்கியங்களில் , ஆத்ம உயிர்ப்புகள் ஆத்மக் கிளர்ச்சிகள் பற்றிய குறிப்புகள் இடம் பெற முடியாது" என சிவத்தம்பி சொல்லியிருப்பார்.

இந்த ஆத்ம உயிர்ப்புகள்- தவிப்புகள் என்கிற அன்பு வழி பாதை என்பதை வாழ்வியலாக்கத்தான் , பெரும் போராட்டங்களை சில பெரியோர்கள் நடத்திப் பார்த்துள்ளனர். மதம், கலை இலக்கியம், என்பதில் மட்டுமல்லாமல் அமைப்பு, அரசியல் என்கிற அம்சங்களிலும் இந்த ஆத்ம சிலிர்ப்புகளை உருவாக்கவே காந்தி முயற்சித்தார்.

வேறு சிலிர்ப்புகளை உணர்ந்து பேசியோ எழுதியோ மட்டுமே சென்றவர்களிடத்திலிருந்து மாறுபட்டு , அதாவது வேன்கார்டிசம் என்பதிலிருந்து மாறுபட்டு exemplariness என்கிற உயர் நிலைக்கு வாழ்வியலை உயர்த்த முயற்சித்தார் காந்தி. மத, இலக்கிய, அமைப்பு ஆசான்களிடமிருந்து , கூடவே சென்று காந்தி தனித்து நிற்கும் இடம் இதுதான்.

ஈ எம் பார்ஸ்டர் எழுதினர் : " He is with the founders of Religion, whether he founds religion or not. He is with great artists, though art was not his medium. He is

with all the men and women who have sought something in life that is neither chaos nor mechanism, who have not confused happiness with possessiveness, or victory with success, and who have believed in love” 8-2-2025

feb 9

Akeel Bilgrami’s Inquiry on Unalienated Life-

பில்கிராமியின் ஆய்வுலகில் அந்நியமாகா பெருவாழ்வு..

அகில் பில்கிராமி எழுத்து எப்போதும் ஈர்க்கக்கூடியது. மார்க்சின் அந்நியமாதல் குறித்து தொடர்ந்து அவர் பேசிக்கொண்டிருப்பார். மார்க்சின் Economic and Philosophical Manuscripts 1844 மொழியில் அல்லாமல், அந்நியமாதலுக்கு உள்ளாகாத வாழ்வு குறித்து, காந்தியை முன்வைத்து பொதுவாக பேசி வருபவர் பில்கிராமி. காந்தியின் ‘வாழ்ந்து காட்டும்’ மாடலின் முக்கியத்துவத்தை பில்கிராமி வலியுறுத்துவார். டன் டன்னாக பேசுவதிலிருந்து இந்த Gandhian ideal எப்படி மாறுபட்டு முக்கியமாகிறது என அவர் சொல்வார்.

அகில் பில்கிராமியும், மார்க்சிய அறிஞர் பிரபாத் பட்நாயக்கும் நடத்திய உரையாடல் ஒன்றும் அற்புதமானதாக இருக்கும்.

அகில் பில்கிராமியின் Marx Gandhi and Modernity மிக முக்கியமான நூல். இது குறித்து சில உரையாடல்களிலும், முகநூலிலும் தொட்டுக்காட்டியுள்ளேன். கிண்டில் வழி முன்பு படித்தது.

பில்கிராமியின் மேற்கு தத்துவ விளக்கங்களை புரிந்து கொள்வதில் நான் தடுமாறுகிறேன். பயிற்சியின்மையை உணர்கிறேன். இதனால் கடந்த 2022 ல் வெளிவந்த அவரின் நூலான

Capital Culture and the Commons யை விளங்கிக் கொள்வதில் என் போதாமையை பெரிய அளவு உணர்கிறேன்.

அசோகா பல்கலை ஒத்துழைப்புடன் வந்துள்ள சிறிய நூல்தான் இந்த capital culture and the commons . ஆனாலும் பக்கந்தோறும் தன் அடர்த்தியை பரப்பிக்கொண்டிருக்கிறது. பெரும் சிந்தனையாளர்கள் இந்த நூல் குறித்து விதந்து பேசியுள்ளனர். தட்டுத் தடுமாறி படித்தேன் என்றாலும், உள் வாங்கிய திறனில் தோல்வியை உணர்ந்தேன். இருந்தபோதிலும் , அகில் பில்கிராமி தொடர்ந்து பேசும் மய்யத்தை - unalienated life என்பதை பிடிக்க முடிந்தது. அது தான் ஆறுதல்.

அறிஞர் நோம் சாம்ஸ்கி , இந்நூல் அழைத்துச் செல்லும் திசையை தன் வரிகளால் உணர்த்தியுள்ளார். அவ்வரிகள்

..this impressive inquiry leads us step by step to recognise how essential it is to attain a unified unalienated mentality if we are to have any hope of overcoming crises so severe that we can barely find words to capture their immensity

சாதாரண மனிதர்களை commons என்கிற சொல் விரிவில் பில்கிராமி அழைத்துச்செல்கிறார். அவர்கள் தங்களுக்கிடையேயான ஒத்துழைப்பால் சக வாழ்வை நடத்த வேண்டியவர்கள். Can human cooperation be enforced by regulation, by policing and punishing என்கிற கேள்வியை வைத்து பில்கிராமி விவாதிக்கிறார்.

அன்றாட எளிய உதாரணங்களை அவர் லாக், விட்ஜென்ஸ்டைன், நீட்சே , பூக்கோ தத்துவ மொழியில் வைத்து நூலை கட்டுகிறார். மார்க்சின் அந்நியமாதலை எடுத்து விவாதிக்கிறார்.

ஊருடன் ஒத்துழைக்காமல் தன் ராஜ்யத்தை, மேலாண்மையை தன் நலனை மனிதர்களில் சிலர் நிறுவ செய்யும் முயற்சிகள் ஆங்காங்கே- வீடு, வெளி, அமைப்பு, ஆட்சி, நிலம் என அனைத்து இடங்களிலும்- சிறப்பிடம் கோரும் நிலையை நாம் காண்கிறோம். இது ஏன் எப்படி என்கிற தத்துவ விசாரணையில் அகில் நுழைகிறார். அவர் வரிகளில்

An individual commoner decides not to cooperate is always at an advantage, since the gains are immediate, whereas the gains from cooperating are long term, dispersed over the whole group, and above all, always uncertain.

நம் எல்லோருக்கும் 'காந்தி கண்ணாடியை' அகில் பில்கிராமி காட்டுவதை நான் உணர்ந்தேன்.

அகில் பில்கிராமி எழுப்பக்கூடிய , நம் அன்றாட வாழ்வில் நாமெல்லாம் கேட்கக்கூடிய மிக முக்கிய கேள்வி

What if I cooperated and others did not?

நம்மூரில் 'பால் ஊற்றின கதை' தான். நாம தண்ணீர் ஊற்றினா தெரியப் போகிறதா என்ன என்கிற 'not to cooperate for an immediate advantage'. நான் ஒத்துழைக்கலாங்க, மற்றவர் செய்வார்கள் என்பதற்கு என்னங்க உத்தரவாதம் - எனவே என்னிடம் ஏங்க எதிர்பார்க்கிறீங்க என்கிற வாதம்- இந்த வகை உரையாடல் பெருக்கத்தை நாம் அனைவரும் அன்றாட நிகழ்வுகளில் செய்து வருகிறோம்.

இந்த உரையாடலையே இன்னும் புரட்சி வரை நீட்டித்துப்பார்த்தால், புரட்சிகர அமைப்புகளில் சொல்லிக்கொடுக்கும் பாடம்- நாம் என்ன ஆயுதம் எடுக்க வேண்டும் என்பதை எதிரிதான் தீர்மானிக்கிறான் என்பது போன்ற.... . காந்தி இங்கு அடிப்படையில் மாறுபட்ட ஒன்றை

முன்வைத்து அனுசரித்தார். என்- நம் போராட்ட முறை அகிம்சை வழி, எதிரி என்ன ஆயுதத்தால் தாக்கினாலும், என் வழி அகிம்சை- thro self suffering- thorough soul force.

அகில் சிறுவனாக இருந்தபோது, அவர் தந்தையுடன் நடந்த உரையாடல் ஒன்றை இந்நூலிலும் சுட்டிக்காட்டுகிறார். பணம் வெளித்தெரிய பர்ஸ் ஒன்று சாலையில் கிடக்கிறது. தந்தை கேட்கிறார் 'அகில் என்ன செய்யலாம்' என்று. அகில் கண்டிப்பாக எடுக்கலாம், நாம் எடுக்கவில்லையெனில் வேறு எவராவது எடுக்கமாட்டாரா என்ன, ஆகவே எடுத்துக்கொள்ளலாம் என்கிறார். அதாவது immediate advantage position so act and enjoy என இதை விரிக்கலாம்.

ஆனால் அகில் தந்தை 'அந்நியமாக வாழ்வின்' நியதி ஒன்றை மெலிதாக கற்றுத்தருகிறார். இல்லை பில்கிராமி, நாம் எடுக்கவேண்டாம்- மற்றவரும் எடுக்க மாட்டார்கள்- உரியவர் வந்து எடுக்க ஏதுவாகும் என்கிற unalienated life பாடத்தை தந்தை தருகிறார். மற்றவர் அப்படி செய்தால், இப்படி செய்தால் என்பதை அகிலிடம் நிறுத்தி, நாம் இப்படி - நான் இப்படி நடந்துகொள்ள வேண்டும் என்கிற பயிற்சியை தந்தை உருவாக்குகிறார். இதைத்தான் காந்தியின் exemplariness எனவேறு நூலில் அகில் சொல்லித்தருவார்.

அகில் பில்கிராமி நமது செயல்களை basic action- intentional action என வகைப்படுத்துகிறார். நமது அடிப்படையான செயல்கள் மூலம் 'அந்நியமாகா உலகம்' நோக்கி நம்மை நாம் நகர்த்திக்கொள்ள முயற்சிக்கலாம் என அகில் சொல்வதை இந்நூல் உணர்த்துவதாக என் புரிதல் உள்ளது.

Liberty , equality, fraternity என்கிற முழக்கங்களால் மட்டும் அந்நியமாதலை இவ்வுலகால் நிறுத்த இயலாது என்கிற முடிவிற்கு பில்கிராமி வருவது போல் தோன்றுகிறது. Unalienated life என்பது பெரும் moral issue. அது இணைந்தால் அந்நியமாகா மானுட வாழ்வின் சாலையை பிடிக்கலாம் என அகில் கருதுவதாக என் வாசிப்பு சென்றது.

9-2-2025

feb 11

So understood Gandhi on Varna and Hinduism

The four divisions define a man's calling, they do not restrict or regulate social intercourse.

The divisions define duties, they confer no privileges

I hold against the genius of Hinduism to arrogate to oneself a higher status or assign to another a lower

A Brahman who claims superiority by right of knowledge falls and has no knowledge of and so with the others who pride themselves upon their special qualities

Varnashrma is self restraint and conservation and economy of energy

A Hindu who refuses to dine with another from a sense of superiority misrepresents his Dharma

My belief in the Hindu scriptures does not require me to accept every word and every verse as divinely inspired..I decline to be bound by any interpretation, however learned it may be, if it is repugnant to reason or moral sense

I do not believe in the exclusive divinity of the vedas. I believe the Bible, the Koran and the Zend Avesta to be as much divinely inspired as the Vedas

I do not disbelieve in idol worship . An idol does not excite any feeling of veneration in me. I think idol worship is part of human nature. We hanker after symbolism. I do not consider an idol worship as a sin.

Hinduism tells everyone to worship God according to his own faith or Dharma, and so it lives at peace with all the religions.

I have never been to reconcile myself to untouchability. I have always regarded it as an excrescence. It is true that it has been handed down to us from generations, but so are many evil practices even to this day

Hindus will certainly never deserve freedom or get it, if they allow their noble religion to be disgraced by the retention of the taint of untouchability

- as quoted In 'Mahatma Gandhi Essays and Reflections' Edited by Sarvepalli Dr Radhakrishnan

11-2-2025

feb 12

சிபிஎம் 24வது கட்சி காங்கிரஸ்

CPI(M) கட்சி காங்கிரஸ் மதுரையில் ஏப்ரல் 2-6, 2025 நாட்களில் கூடவிருக்கிறது. தங்களின் 24வது காங்கிரசிற்கான அரசியல் நகல் தீர்மானத்தை , சரியாக இரு மாதங்களுக்கு முன்னர் பிப் 3 அன்று அவர்கள் பொதுவெளியில் வைத்துள்ளனர்.

பிப்11 அன்று சிபிஎம் கட்சியின் அந்த அரசியல் நகல் தீர்மானத்தை - 64 பக்க pdf படிக்க வாய்ப்பு கிடைத்தது. கம்யூனிஸ்ட் கட்சிகளின் அரசியல் தீர்மானங்களை ஒரு முறைக்கு மேல் படிப்பது நல்லது. அடுத்து எப்போது பார்ப்பேன் என இப்போதே ஊகிக்க முடியவில்லை.

அரசியல் நகல் தீர்மானம் என்பது கட்சி அணிகள் மற்றும் அரசியல் ஆர்வலர் கருத்துரையாளர் மத்தியில் எடுத்துச் செல்லப்படும் ஆவணம். திருத்தம் இருந்தால் பெற்று , அடுத்து வரக்கூடிய கட்சி காங்கிரசில் கூடி இறுதிப்படுத்துவார்கள். அந்த ஆவணம் ஏற்கப்பட்ட அரசியல் தீர்மானமாக அடுத்து வருகிற கட்சி காங்கிரஸ்வரை , கட்சிக்கு வழிகாட்டும் ஆவணமாக இருக்கும். இதை Adopted Political Resolution என்பர்.

அதேபோல political review report என்பது வைக்கப்படும். கடந்த கட்சி காங்கிரஸ் வழிகாட்டலில் நடத்தப்பட்ட அரசியல் இயக்க நிகழ்வுகளின் பரிசீலனை அறிக்கையாக இது அமையும். அடுத்து organisational report என்கிற அமைப்பு நிலை அறிக்கை. இந்த இரு அறிக்கைகளும் பொதுவாக பொதுவெளியில், அரசியல் நகல் தீர்மானம் போல வைக்கப்படுவதில்லை. கட்சி காங்கிரசில் இந்த மூன்று ஆவணங்களும் விவாதிக்கப்பட்டு, ஏற்பிற்கு பின்னர் கட்சி அணிகளிடம் எடுத்துச் செல்லப்படும். மூன்றையும் ஒருசேர பார்க்கும் போதுதான் , எந்தவொரு கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரோக்கிய நிலை குறித்த மதிப்பீட்டிற்கு வர முடியும்.

கட்சி காங்கிரசிற்கான இந்த முறையை கம்யூனிஸ்ட் கட்சிகளின் அரசியல் செயல்பாட்டு பழக்கம் என புரிந்து கொள்ளலாம்.

இம்முறை சிபிஎம் கட்சி தங்கள் அரசியல் நகல் தீர்மானத்தை வழக்கம் போலவே வடிவமைத்துள்ளனர். அறிமுகம் 3 பாராக்கள், சர்வதேச நிலை 57 பாராக்கள், தேசிய நிலை 96 பாராக்கள் என விரிவான 64 பக்க ஆவணத்தை முன் வைத்துள்ளனர். சென்ற 23வது காங்கிரசில் ஏற்கப்பட்ட தீர்மானத்தில் சர்வதேசம் 79 பாராக்களுடன், தேசிய நிலை 173 பாராக்களையும் கொண்ட பெரும் ஆவணமாக இருந்தது. எவ்வளவு பாராக்கள் என்பதல்ல, என்ன அடர்த்தி- என்ன

பார்வை- எதில் அழுத்தம் - அதன் reality என்ன என்பதுதான் பார்க்கப்படவேண்டியவை.

'பொலிட்டிகல் லைன்'- கடமைகள்- சவால்களை சமாளிக்க எழுவீர் என்கிற இறுதியாக்கம் 2.85 to 2.96 பாராக்கள் என்பதாக அமைந்துள்ளது. இந்த சாரப் பிழிவிற்கான விரிவு விளக்கங்களாக அதற்கு மேலே உள்ள நூற்றுக்கு மேற்பட்ட பாராக்களை புரிந்துகொள்ளலாம்.

இம்முறை திருத்தம் தருவதற்கு அக்கட்சித் தோழர்களுக்கு உதவியாக, ஒவ்வொரு பாராவிலும் வரி எண்களையும் சேர்த்து தந்துள்ளனர். இந்த பாராவில் இந்த வரிகளில் திருத்தம் என கொடுப்பவர் துல்லியமாக காட்ட முடியும். தலைமையின் இந்த கவனம் பாராட்டிற்குரியது. கம்யூனிஸ்ட் கட்சியில் தான் இப்படி தலைமை முன்மொழியும் அரசியல் நிலைப்பாடுகள் விவாதமாகின்றன. மார்ச் 5 க்குள் திருத்தங்கள் தரப்படவேண்டும். காங்கிரசிலே தீர்மானமே ஏற்பிற்கு வந்துவிட்டால் அனைவரும் கட்டுப்படவேண்டும் என்பதை சொல்லத்தேவையில்லை.

அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு, உலக சுரண்டல் ஏற்பாடு, அசமத்துவ வளர்ச்சி, வேலையின்மை, பட்டினி குறியீடு- சுகாதாரம், காலநிலை பிரச்சனைகள், நடந்து வரும் யுத்தங்கள், மக்களின் போராட்டங்கள் என உலக அரங்கு நிகழ்வுகள் சுருக்கமாக சொல்லப்பட்டுள்ளன. சிபிஎம் உலக மக்களின் நியாயமான போராட்டங்களில் , சோசலிச சக்திகளுடன் துணை நிற்கும் என்பது சொல்லப்பட்டுள்ளது.

இந்தியாவில் பாஜக ஆட்சியின் மீறல்கள் பல்வேறு கோணங்களில் அலசப்பட்டுள்ளது. இந்துத்துவா கார்ப்பரேட் கூட்டு- ஒரே பெரும் மார்க்கெட் இரைச்சலுடன் நடைபெற்றுவருவது கவலையுடன் பார்க்கப்பட்டுள்ளது. மக்களின் பல்வேறு போராட்டங்கள், வர்க்க இயக்கங்கள் பேசப்பட்டுள்ளன. நகல் தீர்மானத்தின் மய்ய ஆன்மா இறுதி பாராக்களில் தென்படும்.

2.95

The party has to take on the BJP RSS politically, ideologically, culturally and organisationally.

The party has to resolutely wage the struggle of the workers, peasants, rural labour and all other sections of the working people against exploitation under the neo liberal order

The party has to rally all the Left and Democratic forces to present the real alternative before the people.

(முந்திய பாராக்களில் காங்கிரசும் இந்த neo liberal orderக்காக நிற்கிற கட்சி என்கிற வரையறுப்பும் உள்ளது. இந்தியா கூட்டணி சொல்லப்பட்டாலும் , காங்கிரசுடன் கூட்டில்லை, திரிணமுலுடன் இல்லை என்பதும் சொல்லப்பட்டுள்ளது)

இறுதி 2.96 பாரா தன்னால் முடியும் என்கிற நம்பிக்கையை வெளிப்படுத்தும் பாரா

2.96 Let the entire party take the political and ideological message of this Resolution to the people of India!

Let us March forward to build a strong all India party with an organisation that has deep roots among people!

Based on the glorious traditions of the communist movement, we are confident that we shall rise upto meet the challenges before us.

சிபிஎம் கடந்த 23 வது கட்சி காங்கிரஸ் கேரளாவில் ஏப்ரல் 2022ல் நடந்தது.

அதிலும் இறுதி பாராக்கள் பொலிட்டிகல் லைன், கடமைகள், முடிவாக என்று அமைந்தன. இறுதிப் பாரா கவனம் செலுத்த வேண்டிய 5 அம்சங்களை சொல்லியிருந்தது. இவை எந்த அளவு concentrate செய்யப்பட்டன என்பதை ரிவ்யு ரிபோர்ட் தான் சொல்ல முடியும். Concentrate on

Strengthening the revolutionary party with a mass line to establish strong bonds with the people

Widening party’s reach and influence among the people and rallying Left and democratic forces

Strengthening party organisation with quality membership as directed by the Kolkata plenum

Focus to attract youth as well as women to the party

Strengthening ideological struggle against all alien ideologies

இம்முறை இவை உள்ளிடாக சொல்லப்பட்டுள்ளன. சிபிஎம் பட்டியலிட்டுள்ள அரசியல் பொருளாதார சமூக சவால்கள் எளிதானவையல்ல, மிகப்பலமானவை. அவர்களின் கட்சி காங்கிரசிற்கு நல் வாழ்த்துகள்!

12-2-2025

feb 13

1922 காந்தி வழக்கு

புகழ் வாய்ந்த தலைவர்கள் மீதான வழக்குகளில், அத்தலைவர்கள் நீதிமன்றத்தில் ஆட்சியாளர்களின் மீறல்களை வெளிக்கொணர்ந்து , அச்சமற்று மக்களுக்காக நின்ற ஏராள நிகழ்வுகள் உலகில் காணக்கிடைக்கின்றன.

கம்யூனிஸ்ட்கள் கொலோன் வழக்கு என மார்க்சிற்கும், வரலாறு என்னை விடுவிக்கும் என பிடல் காஸ்ட் ரோவிற்கும், இந்தியாவில் இளம் கம்யூனிஸ்ட் போராளிகளாக டாங்கே போன்றவர்களின் மீரத் வழக்கு குறித்தும் அறிந்தவர்களாக இருப்பர்.

சௌரிசௌரா பெரும் கலவரத்திற்கு பின்னர் , காந்தி மீதான 1922 வழக்கும் மிகச் சுவையானது. பிற போராளிகள் போல் பக்கம் பக்கமாக பல மணிநேரம் காந்தி , தன் வழக்கிற்கான உரையாடலை நீதிமன்றத்தில் தந்திருக்க மாட்டார். மிகச் சுருக்கமாகவே அவரது உரை அமைந்திருக்கும். அதே நேரத்தில் sharp- precise ஆகவும் இருக்கும். எவ்வளவு அச்சமற்றவராக அவர் இருந்தார் என்பதையும் நமக்கு உணர்த்தும்.

18-3-1922ல் இந்த வரலாற்று புகழ்மிக்க நீதிமன்ற உரை காந்தியால் தரப்பட்டது. நீதிபதி சி என் புரூம்பீல்ட், (அகமதாபாத் மாவட்ட மற்றும் செசன்ஸ்). நீதிமன்றத்தில் கஸ்தூர்பா, சரோஜினி நாயுடு, மாளவியா , கேல்கர், அனுசுயாபென் உட்பட பலர் இருந்தனர்.

காந்தி மீது செக்ஷன் 124 A படி தேசத்துரோக வழக்கு. அவர் யங் இந்தியாவில் எழுதிய மூன்று கட்டுரைகள் செப் 29 1921 Tampering with loyalty, டிசம்பர் 15, 1921ல் The puzzle and its solution மற்றும் பிப் 23 1922ல் எழுதிய Shaking the manes ஆகியவை அரசின் மீது ‘attempting to excite disaffection’ உருவாக்குவதாக உள்ளது என்பது குற்றச்சாட்டு. அரசின் மீது ஒருவகை இகழ்வை, பாச முறிப்பை காந்தி எழுத்துக்கள் செய்துவிட்டன. சௌரிசௌரா போலீஸ் நிலைய எரிப்பு உட்பட கலவரங்கள் உருவாயின என காந்தி மீது குற்றப்பத்திரிகை சொல்லப்படுகிறது.

நீதிமான் புரும்பீல்ட், ‘குற்றத்தை ஏற்கிறீர்களா காந்தி’ எனக் கேட்கிறார். காந்தி முழுமையாக ஏற்பதாக பதில் சொல்கிறார். ஏதாவது அறிக்கை சொல்ல விழைகிறீர்களா எனக்கேட்டவுடன், காந்தி தன் வாக்கு மூலத்தை வைக்கிறார். நீதிபதி பேசுவதை எழுத்து வடிவிலும் கொடுக்க வேண்டினார். தர காந்தி ஏற்கிறார். தருகிறார்.

சில வரிகளை மட்டும் அதிலிருந்து எடுத்துக் கொடுத்துள்ளேன்

I have no desire to conceal..to preach disaffection towards the existing government has become a passion with me..

I wish to endorse all the blame in connection with the Bombay occurrences, Madras occurrences and the Chauri Chura occurrences…it is impossible for me to disassociate myself from the diabolical crimes..and mad outrages

I knew that I was playing with the fire. I ran the risk and if I was set free I would still do the same.

I wanted to avoid violence. Non violence is the first article of my faith. It is also the last article of my creed..I know that my people have sometimes gone mad. I am deeply sorry for it, I am therefore, here to submit not to a light penalty, but to the highest penalty.

I do not ask for mercy

In my opinion, non cooperation with evil is as much a duty as is cooperation with good. ..non violence implies voluntary submission to the penalty of non cooperation with the evil.

The only course open to you, the Judge, is either to resign your posts and thus disassociate yourselves with evil, if you feel the law you are called upon to administer is an evil, …or inflict on me severest penalty, if you believe that the system and the law you are assisting are good to people of this country, and my activity is, therefore, injurious to the common weal.

காந்தி மீது பெரும் மரியாதையை தெரிவித்து 6 ஆண்டுகள், திலகருக்கு இணையாக , தண்டனை என நீதிபதி தீர்ப்பு தந்ததும், காந்தி திலகருக்கு இணையாக தனக்கும் தரப்பட்டதற்கு நன்றி தெரிவித்து சிறை போந்ததும் தனி வரலாறு.

காந்தியின் அஞ்சாமை, நேர்மை , அகிம்சை மீதான அசைக்க முடியா நம்பிக்கை, தண்டனைகளை ஏற்று அனுபவிக்க உகந்த மனப்பயிற்சி, நிதானம்- மக்கள் மீதான நேயம் - அவர்களில் சிலரின் பைத்தியக்கார வன்முறைக்காக தான் வதை ஏற்றல் என பல காட்சிகள் இந்த உரையில் நமக்கு கிடைக்கும். 7, 8 பக்கங்கள் கூட இவ்வுரை இருக்காது. வாய்ப்புள்ளவர் முழு உரையும் படித்துப் பார்க்கலாம்.

சௌரி சௌரா நூற்றாண்டின் போது , தனியாக அது குறித்து சிறு நூல் ஒன்றை எழுதியுள்ளேன். அது இணையத்தில் கிடைக்கும். வாய்ப்புள்ளவர் பார்க்கலாம்.

13-2-2025

feb 14

சீன கம்யூனிஸ்ட் கட்சி

No bounds to practice - no end to theoretical innovation

சீன கம்யூனிஸ்ட் கட்சி நூற்றாண்டை கடந்து , கடந்த 75 ஆண்டுகளாக சீனத்தன்மையிலான நாட்டு கட்டுமானத்தை செய்து வரக்கூடிய கட்சி.

சிபிசி என்கிற சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 20 வது காங்கிரஸ் அக்டோபர் 2022ல் பெய்ஜிங்கில் நடந்தது. அதில் அறிக்கையை ஜின்பிங் (Xi Jinping)அந்நாட்டின் அதிபர், கட்சி பொதுச் செயலர் அக் 16, 2022 ல் முன் வைத்தார். நீண்ட அறிக்கை. பல்லாண்டுகளாக ஆட்சி அதிகாரத்தில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சி , நவீன உலகுடன் எப்படி அனுசரித்து, தங்கள் கட்டுமானத்தை செய்கிறார்கள் என்பதை அறிய ஆர்வம். முன்பு கட்சி காங்கிரஸ் வந்தபோது, சிறிது எழுதியிருந்தேன்.

இந்தியாவில் சிபிஎம் 24 வது காங்கிரஸ் ஏப்ரல் 2025 சூழலில், 2022ல் நடந்த சிபிசி புரிதலையும் சேர்த்து பார்த்தால் உசிதம் என மனம் கோரியது. திரும்ப சிபிசி அறிக்கையை (ஆங்கில வழி) வாசித்ததில்... மனதில் பட்டவை- தொட்டவை.

சிபிசியின் ‘இரண்டாம் நூற்றாண்டு கனவை ‘ அறிக்கை , கொஞ்சம் தொட்டுக்காட்டுகிறது. முதல் நூற்றாண்டான 1921-2021 காலச் சூழலில் கட்சி உதயம், போராட்டங்கள், மாவோ தலைமை புரட்சி, ஆட்சி, மக்கள் ஜனநாயகம், ஆரம்ப சோசலிசம் சீனத்தன்மைகளுடன் என்பதை அறிக்கையில் சொல்கின்றனர். கட்சி வரலாற்றிற்கென புதிய சீன மொழி ஆவணங்களை கொண்டு வந்தது, தனி அருங்காட்சியகம் வைத்துள்ளது பற்றி பெருமையாக குறிப்பிடுகின்றனர்.

Building a Modern Socialist Country with Chinese characteristics என்பது தான் கட்சி காங்கிரசின் மய்ய அறைகூவல். அப்படியென்றால் என்ன, எத்தகைய முயற்சிகள், வாய்ப்புகள் என்ன, எப்படிப்பட்ட மேன்மை அடையப்பட்டுள்ளது, என்ன தடைகள்- குறைகள்- பலவீனங்கள் என ஓரளவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளன.

75 ஆண்டுகால கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி, ‘எல்லாம் இன்ப மயம் என்கிற தோரணை ‘ அறிக்கையை உள்ளார்ந்து பார்த்தால் இல்லை என்கிற புரிதல் கிடைக்கிறது. 140 கோடி மக்கள் வாழும் சீன நாட்டில், 75 ஆண்டுகளாக ஒரே கட்சி கம்யூனிஸ்ட் கட்சி உள்ள நாட்டில், மாற்று அரசியல் கட்சி என ஏதுமில்லா சூழலிலும், அக்கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை 96 லட்சம்தான் என ஜின்பிங் தெரிவித்துள்ளார். அதாவது

மொத்த ஜனத்தொகையில் 7 சதம் கட்சி உறுப்பினர்கள். இந்தியாவில் போகவேண்டிய தூரம் மிக மிக தொலைவு என உணரமுடியும்.

கட்சி உறுப்பினர்களின் 'குவாலிட்டி', சிறப்பு- போதாமை, மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனை தேர்ச்சி போன்றவையும் பேசப்பட்டுள்ளது.

மிக முக்கியமாக தாங்கள் மிக ஆரம்ப நிலை சோசலிச் கட்டுமான stageல் இருப்பதை தொடர்ந்து அடக்கத்துடன் , சிபிசி தலைமை சொல்லி வருகிறது. அதற்குரிய சுபிட்சம்- வறுமை, வேலைக்கான போராட்டம், கிராமப்புற அவலங்கள் என ஓரளவு அறிக்கை மூடி மறைக்காமல் பேசுகிறது. கடந்த 10 ஆண்டுகளில் கோடிக்கணக்கானவரை வறுமையிலிருந்து மீட்டு சற்று உயர்த்தியுள்ளதாகவும், வாழவே தகுதியற்ற இடத்திலிருந்து மில்லியன் கணக்கான மக்களை வெளியேற்றி , வாழத்தகுந்த இடங்களில் குடியமர்த்தியதை அறிக்கை ஏற்கிறது. பல counties டிவிஷன்கள் முன்னேற வேண்டியுள்ளது.

ஊரக இடிபாடுகளுடன் கூடிய வீடுகளை சரி செய்து வரும் திட்டம் பற்றி பேசுகிறது. நகர்ப்புற பெருக்கத்தால் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள், வேலை வாய்ப்பு சவால்கள், மருத்துவ சவால்கள் சொல்லப்பட்டுள்ளன. தனியார் மருத்துவமனைகளின் அவசியம் சொல்லப்பட்டுள்ளது.

அவர்கள் கட்சி காங்கிரசை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை என நடத்தி வருகிறார்கள். இந்தியாவில் மூன்று ஆண்டுக்கு ஒருமுறை என நடத்தப்படுகிறது. சீனா தனது 14 வது ஐந்தாண்டு திட்டத்தை நிறைவேற்றி, அதன் திசைகாட்டலில் பயணிக்கிறது. 2035ல் சில குறியீட்டு எல்லைகள் அடைதல் என நிர்ணயித்துள்ளனர். Advanced Socialist culture- moderately prosperous society- process of people's democracy- improved public well-being எனச் சொல்கின்றனர்.

கட்சிக்குள் தலைமையை ஏற்று நடத்தல் என்பதில் இன்னும் ஒழுங்கீனம் இருப்பதை சுட்டிக்கட்டியுள்ளனர். அசிரத்தை, கடமை வழுவுதல், shocking cases of corruption-ஊழல், சலுகை கோரும் இயல்புகள், அதிகார வர்க்க மனப்போக்கு , ஆங்காங்கே செய்யப்படும் ஊதாரித்தனம், wavering political conviction என பல பலவீனங்களை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

நாட்டின் பொருளாதாரத்தில் acute structural and institutional problems- ஏற்றத்தாழ்வான வளர்ச்சி, ஒருங்கிணைக்கப்படாத வளர்ச்சி, நீடித்து நிலைபெறா வளர்ச்சி என்பதை சுட்டிக்காட்டிவிட்டு, traditional

development model நாட்டை முன்னேற்ற பாதைக்கு அழைத்துச் செல்லாது என மதிப்பிட்டுள்ளனர். இதனால் சோசலிச கட்டுமான மீது சிலர் அவநம்பிக்கையுடன் பேசுவதை நிராகரித்துள்ளனர்.

கட்சியின் தலைமைத்துவம் குறித்து முறையான மாற்றங்களை உருவாக்கி வருவதும், மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி , நவீன சோசலிச கட்டுமான செய்வதையும் சொல்கின்றனர். Centralised unified leadership என்பதற்கு அழுத்தம் கொடுத்துள்ளனர்.

4 அம்சங்களை உத்தியாக சொல்கின்றனர். Deepen reforms, modern socialist country, advancing law based governance, strengthening party self governance. கட்சி நிர்வாகம், சட்டப்படியான ஆட்சி நிர்வாகம் என்பனவும் strategy ஆக காட்டப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

தலையாய முரண்பாடு என கம்யூனிஸ்ட்கள் பொதுவாக ஏகாதிபத்தியத்திற்கும் தேசிய மக்களுக்கும் எனச் சுட்டிக் காட்டுவர். ஆனால் இந்த அறிக்கை இப்படிச் சொல்கிறது.

We have identified the principal contradiction facing Chinese society as that between unbalanced and inadequate development and the people's ever growing needs for better life. இது மிகச் சரியான புரிதலாகவே எனக்குப்படுகிறது. 832 கவுண்டிஸ் என்கிற ஆட்சி பிரதேச மக்கள் வாழ் நிலங்கள் மிக மோசமான impoverished counties என அடையாளம் காட்டப்பட்டு மீட்டதாக சொல்கின்றனர். மொத்தம் 2851 டிவிஷன் கவுண்டிஸ் இருப்பதாக அறியமுடிகிறது. நிலைமை சற்று மோசமாகவே தெரிகிறது.

GDP எனப்பார்த்தால் 114 டிரில்லியன் யுவான் என்கிறார்கள். யுவான் மதிப்பு 12 ரூபாய் எனச் சொல்லலாம். அமெரிக்காவிற்கு அடுத்த உற்பத்தி நாடு . நகர்ப்புற மக்கள் 68 சதம். பிரம்மாண்ட கட்டுமானங்கள் கொண்ட நாடு சீனா. மக்கள் கசக்கப்பட்டிருக்கலாம். இப்போதும் அதிகமாக வேலை செய் அதிகமாக சம்பாதி more hard working more earning என்றுதான் சொல்கின்றனர். Deepened reform with tremendous political courage என அவர்கள் சொல்வதை decode செய்து பார்த்தால்தான், கோடிக்கணக்கான மக்களின் புலம்பலையையும், வதையையும் ஊகிக்க முடியும்.

140 நாடுகளுடன் வர்த்தக உறவு கொண்ட பெரும் பொருளாதாரத்தை சீனர் கட்டியுள்ளனர். High standard free trade zones , global oriented network, proactive opening up என்பதை பாலிசி ஆக்கியுள்ளனர். சீனர் வாழும் வயது 78 என உயர்ந்து இருப்பதை கவனிக்காமல் இருக்க முடியாது. Per capita

disposable income 35000 yuan . அதாவது ஆண்டிற்கு தலைவாரியாக சராசரி செலவு செய்யும் சக்தி 4 லட்சத்து 20 ஆயிரம் ரூ. மாதம் ரூ 35 ஆயிரம். இந்தியாவில் தனிநபர் கையில் செலவழிக்க கிடைக்கும் வருவாய் என 2024ல் 2 லட்சத்து 14 ஆயிரம். மாதம் இந்தியர் ஒருவரால் செலவழிக்க முடிந்த சராசரி வருவாய் 18000. மத்திய 7 வது சம்பளக் கமிஷன் 2016ல் குறைந்தது 18 ஆயிரம் என நிர்ணயித்ததைப் பார்த்தோம். இந்தியா போக வேண்டிய தூரம் புலப்படும்.

சீனர்களில் 100 கோடி பேருக்கு old age insurance- medical insurance இருக்கிறது எனச் சொல்கின்றனர். இன்னும் கோடிக்கணக்கில் வீடுகள் சரி செய்ய வேண்டியதை சொல்கின்றனர். சீனாவின் முன்னேற்றம் உலக வறுமை கோட்டை குறைக்கும் என நம்பிக்கையை தெரிவிக்கின்றனர். நகர்ப்புற ஊரக வருவாயில் பெரும் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதை ஏற்றுள்ளனர்.

கட்சியில் Self reform என்கிற பதத்தை பயன்படுத்தியுள்ளனர். உலகிற்கு நாம் Chinese insight ஒன்றை கொடுத்துள்ளோம் என பெருமை கொள்கின்றனர். கீழ்கண்ட வரிகளை அவர்கள் எழுதிக்கொண்டுள்ளனர். நல்ல தெரிப்புகள் அவை.

To uphold and develop marxism , we must integrate it with china’s specific realities..less does it mean memorising and reciting as rigid dogma.

We must continue to free our minds, seek truth from facts, move with the times, and take a realistic pragmatic approach.

We must base everything we do on actual conditions and focus on solving real problems arising in our reforms, opening up and socialist modernisation

We must keep responding to the questions posed by China, by the world, by the people and by the times- we should find right answers suited to the realities of China and the needs of our day

Governing by virtue, selecting on the basis of merit, promoting harmony between humanity and nature, pursuing self improvement, embracing the world with virtue, in good faith and being friendly with others, fostering neighbourliness.

Just as there are no bounds to practice, there is no end to theoretical innovation.

Good command of world view. We must put people first. People centeredness is an essential attribute of Marxism

அழகான வரிகள். 75 ஆண்டுகால அதிகாரமிருந்தும், வாழ்வின் சோதனைகளால் புடம்போட்டு, நிலத்தில் கால் ஊன்றி பேசியுள்ளனர். ஆயிரம் குறைகள் இருக்கலாம் . மக்கள் நல்வாழ்விற்காக, தங்கள்

பார்வையில் அவர்கள் போராட்ட நடத்தி வருகின்றனர். இந்தியர்களும் கற்போம். நம் பெருமிதங்களை குறைக்காமல், பலவீனங்களை மூடாமல் கற்போம்.

14-2-2025 காதலர் தினம் இது என் சீனக் காதல் அல்ல (காதலர்கள் அனைவரின் கண்ணியமான வாழ்விற்கு நல் வாழ்த்துகள்- let us behold our love with all dignity)

feb 16

சிகாகோ பல்கலை வட்டமேஜை இரங்கல் உரை பிப்ரவரி 1, 1948

காந்தி சுடப்பட்டு மரித்த செய்தி இந்தியாவை மட்டுமல்ல, உலகத்தையும் உலுக்கியது. (நல்லவேளை ஒழிஞ்சான் பா என நினைத்த ஓரிரு கருத்த மனங்கள் இல்லாமல் இல்லை) . உலகின் ஆட்சியாளர்கள், புகழ் வாய்ந்தவர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், காந்தியை அறிந்தவர்கள் என ஏராளம் தங்கள் புகழஞ்சலி வழி மரியாதையை செய்தனர்.

அப்படிப்பட்ட அஞ்சலி உரைகளில் ஒன்று மில்டன் மேயர் அவர்களின் அஞ்சலியும். இந்த உரையின் பகுதிகள்Mahatma Gandhi Essays and Reflections by Dr Radhakrishnan தொகுப்பில் பிற்சேர்க்கையாக பக் 550-551 தரப்பட்டுள்ளது. அந்த வரிகளின் ஆழம் உள்வாங்குபவர்களால் உணரப்படும். மில்டன் மேயரின் சில வரிகள் (order as per my convenience)

To most white men he was a comical, certainly an unrealistic figure. Alongside the strong men of our age - the Roosevelts, Churchills , and Stalins- he was unimpressive in his shawl and his loincloth..but men everywhere are wondering whether this meekest of men may not have been the strongest man of our age. Millions of people followed him without benefit of compromise. They followed him to the prison , to prayer and to freedom.

All armed ideologies, including our own, fall together, all bosses who believe in force and all workers believe in force fall together. If Jesus is right, if Gandhi is right, then Roosevelt and Hitler fall together and Wallace and Taft , Truman and Stalin. If Gandhi is right, all those who believe in force and pressure of power will carry the day are wrong, and always have been, even though some of them would use force for good rather than for evil purposes.

This, if it is true, is terrible to contemplate. The fate of Churchill’s world empire and of Hitler’s world slavery is before our eyes. If Gandhi is right, if mankind survives in the spirit of love, then the ruins of ‘democracy by force’ and ‘communism by force’ will both bear their blackened testimony to the rightness of the Christian politician.

But this means a revolution much more radical than any of the revolutionaries have ever suggested . It means that we must change the whole order of personal and political life or change nothing.

This old man had no possessions, no position. His life was worth nothing to him, and his death did not bother him. But the world was shaken because, without an army, airforce, without a stick or stone, without power or patronage, he pulled down the pillars of an empire and brought freedom to a sub continent of four hundred million unarmed people. 16-2-2025

feb 17

Gandhiji felt so on the question of Nationalism vs Internationalism

" In my opinion, it is impossible for one to be an internationalist without being a nationalist.

Internationalism is possible only when nationalism becomes a fact - that is when people belonging to different countries have organised themselves and are able to act as one man

It is not nationalism that is evil, it is the narrowness, selfishness, exclusiveness which is the bane of modern nations which is evil. Each wants to profit at the expense of and rise on the ruins of the other.

Indian nationalism has, I hope, struck a different path. It wants to organise itself or to find self expression for the benefit and service of humanity at large.

Anyway, there is no uncertainty about my patriotism or nationalism. God having cast my lot in the midst of the people of India, I should be untrue to my Maker if I failed to serve them.

If I do not know how to serve them, I shall never know how to serve the humanity. And I cannot possibly go wrong so long as I do not harm other nations in the act of serving my country

- as quoted In ' Gandhi's India Unity in Diversity' NBT of 1968 reprinted version 2021

17-2-2025

feb 17

Union Govt's Three Language Policy from its Documents

மத்திய அரசின் ஆவணங்களான தேசிய கல்விக்கொள்கையில் காணப்படும் மும்மொழிக் கொள்கை குறித்த வரிகள் இங்கே தரப்பட்டுள்ளன. 1968 கல்விக்கொள்கை ஆவணம், 1992ல் மேம்படுத்தப்பட்ட 1986 கல்விக்கொள்கை ஆவணம், 1992ல் வெளியான செயல் திட்ட ஆவணம் மற்றும் 2020 தேசிய கல்விக்கொள்கை. இந்த கல்விக்கொள்கையில் , ஏதாவது மாநிலத்திற்கு விலக்கு இருக்கிறதா- கொள்கை நிலையிலேயே அப்படி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா எனத் தேடியதில், அப்படி ஏதும் எனக்கு அகப்படவில்லை.

மும்மொழி கொள்கை அமுலாக்கம் 1968ன் முன்மொழிவுகள் சரியாக நாடு முழுதும் அமுலாகவில்லை என 1986 கொள்கை அறிக்கைப் பேசுகிறது. 1992 செயல் திட்ட அறிக்கையும், மாநிலங்கள் முடிவெடுத்தால்தான் மும்மொழிக் கொள்கை எந்த ஒரு மாநிலத்திலும் நடைமுறைக்கு வரும் என ஏற்றுள்ளது.

2020 கொள்கையும், 1986ன் நிறைவேற்றப்படா நிகழ்ச்சி நிரலை கணக்கில் கொண்டு எனப் பேசுகிறது. ஆவணங்களில் காணப்படும் தொடர்புடைய வரிகள் சிலவற்றை இங்கு தொகுத்துக்கொடுத்துள்ளேன்.

பிற்சேர்க்கையில் 1963 அலுவல் மொழி சட்டம்- ஆங்கிலமும் தொடரும் என்கிற திருத்தம், 1976 விதிகள் அதில் தமிழ்நாடு விலக்கு எனச் சொல்லப்பட்டுள்ளதைக் கொடுத்துள்ளேன்.

மும்மொழிக் கொள்கை அறிக்கையில் 1968 லிருந்து , எந்த மாநிலத்திற்கும் விலக்கு என ஏதும் காட்டப்படவில்லை. தமிழ்நாடு இருமொழிக் கொள்கை என்ற நிலையில் தொடர்ந்து போராடி வருகிறது.

1956 அன்றிருந்த மதராஸ் மாநில சட்டத்தின் வரிகளை கொடுத்துள்ளேன்.

National Policy on education 1968

principles

1. Free and compulsory education for all children upto age 14

2. Teachers must be accorded an honoured place. their emoluments and service conditions should be adequate and satisfactory having regard their qualifications and responsibilities

3. Development of languages

a. The regional languages are already in use as media of education at the primary and secondary stages. Urgent steps be taken to adopt them as media of education at the university stage

b. Three language formula: At the secondary stage, the state governments should adopt, and vigorously implement, the three language formula which includes the study of a modern Indian language, preferably one of the southern languages, apart from Hindi and English in the Hindi speaking states, and of Hindi along with the regional language and English in the Non Hindi speaking states.

c. every effort should be made to promote the development of Hindi....The establishment, in Non Hindi states, of colleges should be encouraged

d. Sanskrit : considering the special importance of Sanskrit to the growth and development of Indian languages and its unique contribution to the cultural unity of the country, facilities for teaching at the school and university stages should be offered on a more liberal scale

e.International languages: special emphasis needs to be laid on the study of English and other languages....Study of English deserves to be specially strengthened

National Policy of education 1986 as modified in 1992

1. 10+2+3 structure

2.Languages : The education policy of 1968 had examined the question of the development of languages in great detail; it is essential provisions can hardly be improved upon and are as relevant today as before. the implementation of this part of the 1968 policy has however been uneven. the policy will be implemented more energetically and purposefully

Programme of Action 1992

ch 18 Development of Languages

The NPE 1986 has retreated in respect of languages, the policy elaborated in the NPE 1968.

The policy in respect of development of languages as contained in NPE 1986 has been reiterated without change in the revised policy formulations

The effective implementation of Three Language Formula would require- decision by States to make the study of three languages compulsory at the secondary stage

National Education Policy 2020

The unfinished agenda of the National Policy on Education 1986, modified in 1992 (NPE 1986/92), is appropriately dealt with in this Policy. A major development since the last Policy of 1986/92 has been the Right of Children to Free and Compulsory Education Act 2009 which laid down legal underpinnings for achieving universal elementary education.

4.13

The Three language formula will continue to be implemented in mind the Constitutional provisions, aspirations of the people, regions and the Union and the need to promote multilingulism as well as promote national unity. However there will be greater flexibility in the three language formula, and no language will be imposed on any state. The three languages learned by children will be the choices of States, regions and of course students themselves, so long as atleast two of the three languages are native to India. In particular, students who wish to change one or more of the three languages they are studying so in grade 6 0r 7, as long as they are able to demonstrate basic proficiency in three languages (including one language of India at the literature level) by the end of secondary school.

4.17 ... Sanskrit will thus be offered at all levels of school and higher education as an important, enriching option for students, including as an option in the three language formula..

4.18 ...In addition to Sanskrit, other classical languages and literatures of India, including Tamil, Telugu, Kannada, Malayalam, Odia, Pali, Persian and Prakrit will also be widely available in schools as options for students, possibly as online modules...

4.20 In addition to high quality offeringsin Indian languages and English, foreign languages such as Korean, Japanese, Thai, French, German, Spanish, Potugese and Russian will also be offered at the secondary level..

(இங்கு சீன மொழி தவிர்க்கப்பட்டுள்ளதைக் காணலாம்)

courtesy: www.education.gov.in

இங்கு அலுவல் மொழி விதிகள் 1976 திருத்தப்பட்ட பதிப்பின் வரிகளை தந்துள்ளேன். தமிழ்நாடு தவிர என அதில் இருக்கிறது.

Official Language Rules 1976 (as amended 1987, 2002, 2011)

G.S.R 1052 - In exercise of the powers conferred by section 8, read with sub-section(4) of section 3 of the Official Languages Act, 1963 (19 of 1963), the Central Government hereby makes the following rules, namely ;

Short title, extent and commencement -

These rules may be called the Official Languages (Use for Official Purposes of the Union) Rules, 1976.

They shall extend to the whole of India, except the State of Tamilnadu.

They shall come into force on the date of their publication in the Official Gazette.

1963 Official Language act ஆங்கிலம் தொடரும் என்கிற திருத்தத்தைப் பெற்றது

English language shall be used for purposes of communication between the Union and a State which has not adopted Hindi as its Official Language:

Courtesy rajbhasa.gov.in

The Tamil Nadu Official Language Act, 1956

The Official Language of the State shall be Tamil

3. Not withstanding anything in section 2 and without prejudice to the provisions of Articles 346 and 347 of the Constitution, the English language shall continue to be used for all the official purposes of the State for which it was being used before the commencement of this Act until the State Government, by Notification under section 4, otherwise direct in respect of any official purpose specified in such notification.

4. The State Government may by notification issued from time to time, direct that Tamil shall be used in respect of such official purposes as may be specified in the notification.

Courtesy : Indiacode.nic.in

feb 17

Gandhiji taught us and practised so..

All faiths constitute a revelation of truth, but all are imperfect and liable to err. Reverence for other faiths need not blind us to their faults. We must keenly alive to the defects of our own faith also, yet not leave it on that account but try to overcome those defects.

Imperfect men put it into such language as they can command, and their words are interpreted by other men equally imperfect. Everybody is right from his own standpoint, but it is not impossible that everybody is wrong. Hence for the necessity of tolerance..Tolerance gives us spiritual insight. Cultivation of tolerance for other faiths will import to us a truer understanding of our own.

Experience has taught me that it is a mistake hastily to imagine that anything we cannot understand is necessarily wrong. Some things which I did not understand first have since become clear as day light.

Equimindedness helps us to resolve many difficulties and even when we criticise anything we express ourselves with a humility and a courtesy which leave no sting behind them

All obstacles in our path will vanish if only we observe the golden rule that we must not be impatient with those whom we may consider to be in error but must be prepared, if need be, to suffer in our own person.

- As quoted in 'Gandhi's India Unity in Diversity'

18-2-2025

feb 18

Revised and Redesigned Samagra Shiksha for School education

(This document of GOI goes 347 pages)

Samagra Shiksha -An Integrated Scheme on School education

It envisages the School as a continuum from pre school, primary, upper primary, secondary to senior secondary levels

Samagra shiksha Scheme was launched in the year 2018.

Samagra shiksha Scheme has been redesigned and aligned with National Education Policy of 2020. After aligned with NEP, this scheme was extended further from 2021-22 to 2025-26

As many as 86 recommendations of NEP are included in the Samagra shiksha Scheme.

Recommendation 30 of this is about Three Language formula

The Three language formula will continue to be implemented while keeping in mind the Constitutional provisions, aspirations of the people, regions, and the Union, and the need to promote multilingualism as well as promote national unity.

GOI Budget Provision in 2023-24 for Ministry of education is 1,12,899 cr. Of this roughly is allocated to Samagra Shiksha scheme Rs 37453 cr.

Between FY 2018-19 and FY 2021-22, cumulatively `1,25,013 crore had been released by GoI to the states

Tamil Nadu is has not received this year’s funds from the Union government under the flagship education scheme Samagra Shiksha.

For 2024-25, Tamil Nadu’s allocation under the scheme amounts to ₹3,586 crore of which the Central share is ₹2,152 crore, with a first quarterly instalment of ₹573 crore, which has not yet arrived halfway through the financial year.

Tamil Nadu has had a long-standing opposition to this three language formula, dating back to social movements in the pre-Independence era. From a widespread agitation against mandatory Hindi in the 1930s to violent anti-Hindi riots in the late 1960s, to protests against the NEP and Navodaya schools in 1986, there has been a consistent political consensus on the issue.

TN claims that linking the release of Samagra Shiksha funds to full NEP compliance infringes upon its autonomy.

Courtesy : samagra govt web, PTIMize IAS coaching

feb 19

இலக்கு என்பது தொடர்ந்து இயம்புவதற்கான ஒன்று. கை மாற்றித் தருவதற்கான கருதுகோளும் கூட. இலக்கு அடைவதற்கு பலபடிகளை கொண்டதாக இருக்கும். நெருங்க நெருங்க அதன் தொடவேண்டிய தூரமும் அதிகரிக்கலாம்.

சாதி இல்லா சமூகம் என்பதும் , இந்தியாவில் அப்படியான ஒன்றுதான். சாதி ஒழிப்பு annihilation of caste என்பதில் பல கருத்தியல் மோதல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கலாம். அது வெகுதூர கனவாக இருக்கலாம். சாதி வேண்டாமே எனக் கருதக்கூடியவர்கள் அனுசரிக்கும் வழிமுறைகளும் மாறுபட்டு இருக்கலாம்.

சாதிகள் என்ற பெயரில் சமூகம் காணும் வன்முறைகள், உடல்ரீதியான சித்திரவதைகள், மனத்துயர்கள், உளவியல் தொடர் தாக்குதல்கள்- அழுத்தங்கள் , இவைகளை முற்றிலுமாக துடைத்து , அமைதியான சக வாழ்வு சமுக உருவாக்கம் அடிப்படை அவசியமாகிறது.

சாதிகள் இல்லையடி பாப்பா என்பதுடன் நிற்காமல், அவை நிலைத்து நிற்பதை பார்த்து தாழ்ச்சி சொல்லல் பாவம் எனவும் சொல்லித் தர வேண்டியுள்ளது. இப்போது தேவை ‘தாழ்ச்சி சொல்லா - எண்ணா’, சுய சாதி எனும் மேலாண்மை பெருமிதமில்லா தமிழகம்- உருவாக வேண்டிய புதிய தமிழர் வாழ்வியல்.

அத்துமீறுதல் என்பதை எப்படி யார் எந்த வகையில் வரையறுக்க இயலும். சட்டப்படியான வாழ்வியல் நடத்தை நெறிகள் என்பதை ஏற்ற சமுகம் மட்டுமே , கருத்தொற்றுமைக் கொணர வழி வகுக்கும். மனச் சான்று தவறாமல், கொடுக்கப்பட்ட சட்ட வழி நின்று செயல்படுதல் என்கிற institutional morality இதற்கு அவசியமாகிறது. சட்டத்தில் காணப்படும் bias என ஏதேனும் இருந்தால், அதை களைய கூடும் நியாய மனங்களும் அதிகரிக்க வேண்டும். இருக்கிற சட்டத்தை தன் சாதிக்காரன் , வலுவான வாக்கு வங்கி என்பதால் வளைக்காமல் செயல்படும் morality பரவ வேண்டும். பாலின சமத்துவம் என்பது போலவே கம்யூனிட்டி- சாதி சமத்துவம் என்பதற்கான institutional awareness - தீவிரமாக்கப்பட வேண்டும். இதற்கான monitoring முறைகள் உருவாதலும் நலம் பயக்கும்.

இரு தனிப்பட்டவர்க்கான தகராறின் தன்மையை , சாதிகளுக்கு ஆபத்து என பின்னி பெரிதாக்குவதற்கு இடங்கொடாமை அவசியமாகிறது. பொருளாதார காரணி இருந்தால் அல்லது அரசியல் காரணி இருந்தால், அதை அந்த மட்டில் தீர்க்கத் தெரிந்த மனோ

நடத்தை, நிர்வாக நடத்தை மிகவும் அவசியமாகிறது. அப்படி மட்டுமே உள்ள அல்லது நன்கு தெரிகிற காரணிகளுக்கு சாதி சமுக முலாம் பூசாமல், பதட்டத்தை உருவாக்காத பயிற்சி தேவைப்படுகிறது.

சாதிகள் எனும் கருத்தியலின் மூலக்கூறு பிராம்மணியம் அல்லது எதுவாக இருந்தாலும், இன்றைய இந்திய சமுகத்தின் பொது வாழ்க்கை- பொருளாதார, அரசியல், சமுக வாழ்க்கை - எழுதி ஏற்கப்பட்ட அரசியல் அமைப்பு சட்டம், மற்றும் பிற சட்டங்களின் படியிலானவையே. அதில் மனுவோ அல்லது வேறு மத அபிப்பிராயங்களோ செல்லுபடியாக வேண்டியதில்லை.

சாதி எனும் பழக்கம் நம் அனைவரையும் பீடித்துள்ள பெரும் நோய். தீங்கு. அவரவர் பழக்கத்தில், பிறரை குறைத்திடாத denominational cultural aspects - கலாச்சார நடைமுறைகள்- சடங்கு ஆசார நம்பிக்கைகள் இருக்கலாம். ஆனால் அவை அந்த கம்யூனிட்டிக்கான நம்பிக்கைகளே தவிர, ஆதிக்க சாலைகள் அல்லது தன்னுடையதே உயர்ந்தது என்கிற ஆணவ மேடுகள் அல்ல. அவரவர் குடும்ப - அல்லது சாதி பழக்கம் என்பது அவரவர்க்கானது என்ற அளவில் நிற்க வேண்டும். என் சாதியை சாதிக்க -மேலாதிக்கத்தை நிறுவ , மோதலை உருவாக்க அல்ல என்கிற புரிதல் தேவைப்படுகிறது.

சாதி என்பது எல்லாவற்றையும் விட பெரிய மனநிலையாக - mental state நிலையாக இருக்கிற உளவியல் மீது அவரவர் கவனம் குவிக்க வேண்டியுள்ளது. அந்த உளவியலின் மேல் கீழ் என செயலுக்கு வருகிற நினைப்பை வீழ்த்த வேண்டியுள்ளது. இதை அவரவர் என்பதிலிருந்து தொடங்க வேண்டியுள்ளது.

தமிழர்கள் தங்களுக்கென்று தனித்த குணங்கள் கொண்டவர் என்கிற உரிமை பாராட்டல் , சாதி ஏற்றத்தாழ்வு மோதலில் சரிந்து போவதை புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. ஒவ்வொரு சாதியும் பிற சாதியை எதிர்ப்பது அல்லது தாழ்த்துவது என்கிற எதிர்மறையில்தான் , சாதி மனப்பாங்கு இங்கு குடும்பத்திலிருந்து கை மாற்றி (consciously or unconsciously) தரப்படுகிறது. எல்லாவற்றிலும் சாதி பாரபட்சம் பார்ப்பது என்கிற பெரும் மன நோயுடன் சமுகம் அன்றாடம் நகர்கிறது. தெரு, பள்ளி- கல்லூரிகள், அலுவலகம், அமைப்புகள், அரசியல், பாக்டரிகள் , காவல் நிலையம் , நீதி மன்றம் என எங்கெங்கு காணினும் ஆங்காங்கே subtle ஆகவோ, காட்டமாகவோ ‘சாதி பக்தர்’ குழாம் அமையாத தமிழர் வாழ்வு உருவாகட்டும்.

இன்று சாதி எங்கு வீறு கொண்டு தன் மய்யத்தை கட்டியுள்ளது என்கிற புரிதலில் நிதானம் கொள்வோம். இரு தனிப்பட்ட விவகாரத்தை (கூலி, சம்பளம் , வரப்பு, சொத்து, நிலம், வேலை, காதல் , திருமணம் என இன்னும் பல்வகையிலானவற்றை) கம்யூனிட்டி விவகாரமாக உயர்த்தாமல் , இருக்கிற சட்டப்படியிலான நியாயம் பெறுகிற ஒன்று என்கிற பயிற்சி தமிழ் நாட்டு மக்களிடம் வளர்வது நலம்.

அவரவர் வழிபாட்டு உரிமை அவரவர்க்கு என மத நல்லிணக்கம் போலவே, குறிப்பிட்ட இன்றைய வாழ்வியல் எதார்த்த சூழலில் சாதிய நல்லிணக்கம் என்பதும் நிகழ்ச்சி நிரலாக வேண்டியுள்ளது. சாதிய பிரச்சனைகளில் தலையாய முரண்பாடு எங்கு எவர் வழிபட்டு முற்றி மோதலாகி வருகிறது என்பதை ஆழமாக பார்க்காமல், பேசாமல் - சாதி நல்லிணக்க சமுகத்தை உருவாக்குவது கடினம்.

தமிழ் நாட்டில் சாதிய மோதல்கள் இல்லை, மேலாதிக்க உணர்வு செயலுக்கு வருவதில்லை என நினைத்து விட்டால், அங்கு விவாதத்திற்கு இடமில்லை.

எல்லா நல்லிணக்கத்திற்கும் காந்தி தான் துணைக்கு வருகிறார். அவர் சொல்லித் தருவது

I have frequently said that I do not believe in caste in the modern sense. It is an excrescence and a handicap on progress. Nor I do believe inequalities between human beings. We are absolutely equal.

We need to think of and assert, equality because we see great inequalities in the physical world. Assumption of superiority by any person over any other is a sin against God and man. Thus caste , in so far as it connotes distinctions in status, is an evil

We have not all the facts before us to judge what Adi Shankara did or did not do. Chandala, it has admittedly many meanings, one of which is sinner. If all sinners are to be regarded as untouchables, we should all be under the banner of untouchability. Untouchability is an evil, cannot be defended on the ground of its antiquity.

(There may be) rule of sanitation . But untouchability as we are observing today is a hideous thing and wears various forms in various provinces. It has degraded (us all). It has stunted the growth of millions of human beings. The sooner it is ended, the better for Hinduism, better for India, better for mankind.

19-2-2025

feb 19

மொழி பிரச்சனைக்கு பொது வாக்கெடுப்பு நடத்தலாமே?

இந்தியாவில் 1968 லிருந்து 2020 வரை கல்விக்கொள்கை ஆவணங்கள் வந்துள்ளன. அவை மும்மொழி பார்முலா எனப் பேசுகின்றன. தமிழ்நாட்டில் பொதுவாக , தனியார் பள்ளிகள் நீங்கலாக, அரசாங்க பள்ளிகளில் இரு மொழி பார்முலா அமுலாகி வருகிறது.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் 2020 கொள்கையை ஏற்றுள்ளனர் என்பது உண்மையாக இருந்தாலும், மும்மொழி பார்முலா அமுலாகிறதா என்பதில் உண்மையில்லை. அவரவர் எடுத்துச் சொல்லும் செய்திகளின்படி இதை உணர்கிறோம்.

மத்திய அரசாங்கம் ஒவ்வொரு மாநிலத்திலும் எவ்வளவு அரசாங்க பள்ளிகள் இருக்கின்றன- அவைகளில் எவ்வளவு பள்ளிகளில் மும்மொழி அமுலாகியுள்ளது- எவ்வளவு ஆண்டுகளாக மும்மொழி திட்டம் அமுலாகி வருகிறது என்ற விவரத்தை, உண்மையை எள்ளளவும் மறைக்காமல் வெளியிட வேண்டும். அதே போல் மாநிலம் வாரியாக தனியார் பள்ளிகள் எவ்வளவு , அதில் எந்த அளவு மும்மொழி அமுலாகிறது என்ற விவரத்தை வெளியிட வேண்டும்.

சமகிர சிக்ஷா திட்டப்படி 2020 கல்வி கொள்கைப்படி ‘மும்மொழியை ஏற்றுக்கொண்டு அமுல்படுத்தினால்’ நிதி தந்தார்களா, அல்லது ‘ஏற்றுக்கொண்டு அமுல் படுத்தாவிட்டாலும் நிதியை ‘ தந்துள்ளார்களா என்பதை மத்திய அரசாங்கம் தெளிவு படுத்த வேண்டும்.

தமிழ்நாடு அரசாங்கம், இங்கு எங்கெல்லாம் மும்மொழி பின்பற்றப்படுகிறது, அதில் தனியார் பள்ளிகள் எவ்வளவு - எத்தனை மாணவர்கள் எந்த வகுப்பிலிருந்து எந்த வகுப்பு வரை மும்மொழி கற்று வருகிறார்கள்- மைனாரிட்டி பள்ளிகளில் நிலைமை என்ன, அரசாங்க பள்ளிகள் எதிலாவது மும்மொழி பின்பற்றப்படுகிறதா, எவ்வளவு அரசாங்கப் பள்ளிகளில் இருமொழி மட்டுமே திட்டமாக இருக்கிறது- மாணவர் எண்ணிக்கை என்ன என்பதை வெளியிட வேண்டும்.

மாநில அரசாங்கமோ மத்திய அரசாங்கமோ உள்ளது உள்ளபடி - நிதி உட்பட(திட்ட நோக்கப்படி) - செலவு உட்பட (திட்ட அம்சங்களின் படி) மக்களிடம் முன் வைத்து விட்டால், தொலைகாட்சி விவாதங்களின் அபத்தங்களை காணாமல் இருந்து விடலாம்.

அல்லது தேர்தல் கருத்து கணிப்பாளர்கள் போல், அரசியல் கலவாமல், மாதிரி கணக்கெடுப்பு நடத்தி, நேர்மையாக விவரங்களை வெளியிட்டு விவாதிக்கலாம்.

இல்லையேல்

அனைத்து மாநிலங்களிலும் , பள்ளிகளில் இரு மொழியா மும்மொழியா என்பது குறித்து பொது வாக்கெடுப்பு நடத்தி ஜனநாயக கருத்தை பெறுவது நலம். ஒவ்வொரு 10 ஆண்டுக்கும் ஒரு முறை இவ்வாக்கெடுப்பை நடத்தி மாறும் சமுகத்தின் எண்ண ஓட்டத்தை அரசாங்கம் பெறமுடியும்.

வாக்கெடுப்பு இரகசிய முறையில் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் நடத்த வேண்டும். அதில் electoral college ஆக மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் இருக்கலாம். இவர்களுக்கு தனித்தனி கலரில் வாக்கு சீட்டை நல்கலாம்.

வாக்கெடுப்பு முடிந்தவுடன் எண்ணி வரும் ரிசல்ட்டில் weightage pooling என கணக்கிட்டு அதை பொது வாக்கெடுப்பு ஏற்பாகக் கொள்ளலாம். ஒவ்வொரு பள்ளியிலும் மும்மொழிக்கா இரு மொழிக்கா எதற்கு ஆதரவாக வாக்குகள் விழுந்தன எனப்பார்த்து, மாணவர் தீர்ப்பில் 40 சதம், ஆசிரியர் தீர்ப்பில் 30 சதம், பெற்றோர் தீர்ப்பில் 30 சதம் என 40:30:30விகித கணக்கீட்டில் ஏற்பை முடிவு செய்யலாம். இதன்படி stakeholders அனைவரின் கருத்தும் மிகுந்த ஜனநாயக அடிப்படையில் முடிவாகும் வாய்ப்பு உள்ளது.

இதெல்லாம் நடக்குமா எனக் கேட்டால் , நடந்தால் நன்றாக இருக்குமே என்று மட்டுமே சொல்லும் சக்தி எனக்கு இருக்கிறது.

ஒன்று அரசாங்கங்களின் வெளிப்படத்தன்மை, இல்லையேல் பொது வாக்கெடுப்பில் இந்த பள்ளிகளில் ‘மொழி பிரச்சனைக்கு’ தீர்வு என்பது வந்தால் நல்லது எனத் தோன்றுகிறது.

19-2-2025 12.20

feb 20

Beware Right Intellectuals with their toughness are growing in India also

In the British India as well as Nehruvian India democrats liberals centrists and leftists intellectual were in galore. Ofcourse few right intellectuals were there, but they were found as rare species in the public domain of that years.

Today tough right intellectuals are coming in good speed with their arguments and also in the book world.

One amongst them is Supreme court adv , tamil knowing Sai Deepak. His book India that is Bharat colonoality civilization and Constitution is one such tough one.

It is a well researched book based on many experiences of Africa Asia, native American decolonization. Their hard work is also to be taken note of.

Once left talked about self determination theory, now this right is speaking about 'the right of self definition' that is to define the native through indigenous lens, shying away from western prisms.

Secularism according this right is christianity based western concept, and even Constitution is reflection of coloniality, civilizational inferiority. He ridiculed a concept calling it as constitutional patriotism .

A book need to be studied so carefully and with full concentration. As a leading supreme court adv, he has that ability of putting forth strong arguments as if in the court of law.

He wanted that document Constitution need to be decolonised first.

This book may even help those having strong belief on Dravidian model or Tamil Nationalism. They can appropriate the arguments of Sai Deepak against the so called 'Hindi Imperialism' in the place of western imperialist civilizational ethos. They can claim his theory of the right to self definition of Dravidas or Tamils.

Those who wish to observe the mind roads of Rights can read this book also.

20-2-2025

feb 21

விடுதலை இந்தியாவின் ஒருங்கிணைப்பு மற்றும் ஒற்றுமையை மனதில் கொண்டு, காந்தியின் நூற்றாண்டு கமிட்டியின் உள் பிரிவாக - துணைக்குழுவாக National Integration Sub committee ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. அதன் தலைவராக கே சந்தானம் இருந்தார்.

அந்த தேசிய ஒருங்கிணைப்பு கமிட்டி சார்பில் Gandhi's India Unity in Diversity என்கிற சிறிய வெளியீடு ஒன்றை கொணர்ந்தார்கள். 1968ல் என்பிடி கொணர்ந்தது. காந்தியடிகளின் நூல்தொகைகளைக் கொணர அரும்பாடுபட்ட கே சாமிநாதன் அவர்களின் வழிகாட்டலில், அந்த துணைக்குழு காந்தியின் பார்வைகளை மிகச் சுருக்கமாக தொகுத்து கொடுத்துள்ளது.

மத நல்லிணக்கம்- இந்து முஸ்லீம் ஒற்றுமை- சகிப்புத்தன்மை- பொருளாதார சமத்துவம்- சுயராஜ்யம் என்றால்- தேசியம் சர்வதேசியம்- தீங்கை எதிர்ப்போம்- மானுட சகோதரத்துவம்- மொழி பிரச்சனை என பல்வேறு அம்சங்களில் காந்தியின் பார்வையை கொடுத்துள்ளனர்.

அப்போது குடியரசுத்தலைவராக இருந்த டாக்டர் ஜாகீர் ஹுசைன் முன்னுரை தந்துள்ளார். பிரசுரத்தை அறிமுகப்படுத்தி சந்தானம் எழுதியுள்ளார். காந்தியின் மொழிப்பார்வையை காந்தியர்கள் அறிந்திருப்பர்.

இன்று தமிழகத்தில் மொழி விவாதம் சூடு பிடித்துள்ளது. அரசியல் கொள்கை சார்ந்த பிரச்சனையாக அது தொடர்ந்து பார்க்கப்படுகிறது. என் குடும்பத்தில் மொழி பிரச்சனை எப்படி தீர்க்கப்பட்டுள்ளது, நான் தமிழ் ஆங்கிலம் தவிர வேறு மொழி கற்க விரும்பினேனா- மகன் மகள்- பேரக் குழந்தைகள் என்ன செய்கிறார்கள் என்கிற- என்னிடமிருந்து பார்த்து பேசக்கூடிய விவாதமாக அவை நடைபெறவில்லை. வேறு மொழி கற்பது வெட்டி வேலை. எதற்கு வெட்டியாக பண விரயம், நேர விரயம், சுமை விரயம் என விவாதம் செல்வதையும் பார்க்கிறோம். ஆங்கிலம் படிப்போர் அனைவரும் தமிழ்நாடு தாண்டி செல்வோராகவும் premises கட்டப்படுகிறது. AI வந்த இந்த காலத்தில் அதுவே மொழியாக்கம் செய்யப்போகிறது, வெட்டி வேலை நாம் படிப்பது என்றும் விவாதம் செல்கிறது. அனைத்தையும் தாண்டி தமிழர் தனிக்குணம் பேசப்படுகிறது.

இடதுசாரிகளுக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு அம்சம் பின்காலனியக் கால கட்டுமான தேவையாக உணரப்பட்டால், இந்துத்துவா வலதுகளுக்கு

decolonisation வேதமரபு தேவைப்படுகிறது. திராவிடத்திற்கு பின்காலனிய கட்டுமானம் என்பது ஆர்ய நீக்கம் debrahminisation என்பதாகவும், தமிழ் தேசியவாதிகளுக்கு debrahminisation- dedravidisation என்பதாகவும் பேசு பொருள் உள்ளது.

'மொழி அரசியல்' தமிழ்நாட்டில் நீடிக்கும் ஒன்றாக இருக்கிறது. அதன் மய்ய அச்சாகவும் இருக்கிறது. இன்னும் இருக்கவும் செய்யும். தமிழ் நாட்டில் தலையாய முரண்பாடாக 'இந்தி vs தமிழ்' என்கிற அரசியல் இருக்கிறது. இந்தி என்பது ஏகாதிபத்தியமாக தமிழை விழுங்கிவிடும் என்கிற அய்யமும் ஆபத்துணர்வும் உளவியலில் தொழிற்படுகிறது. சமஸ்கிருத கருத்தியல் ஆதிக்கம் என்கிற பண்பாடு சார்ந்த அச்சம், கவலை , ஆபத்துணர்வும் இங்கு அரசியல் உளவியலாக செயல்படுகிறது.

அவரவர் வீட்டு விவகாரங்களில் மொழி விலகல், பண்பாடு விலகல் ஏற்பட்டாலும் அதனைப் பொறுத்து அனுசரித்து சகித்துக்கொள்ளப்படுகிற நிலை இருக்கிறது. அங்கு வேறுவகை அச்ச உளவியல் தொழிற்படுகிறது. வீட்டிற்கு வெளியே முழு அரசியல் உணர்வும், சமுக பண்பாட்டு அசைவியக்க உணர்வும் மேலோங்கி செயல்படுகிறது. இந்த முரண் பொருளாதார நிலைக்கேற்ப பெரிதாகவோ சிறிதாகவோ இருக்கிற ஒன்று. அதேநேரத்தில் இந்த முரண் பொருட்படுத்தப்படாமல் கேள்விக்கு உட்படுத்தப்படாமல் அவரவரால் மூடப்படும் நிலையும் இருக்கிறது. தனிப்பட்ட வாழ்க்கை நிலைப்பாடு வேறு , பொது அரசியல் வாழ்க்கை நிலைப்பாடு வேறு என்கிற சமாதானத்தையும் செய்துகொள்கிறோம்.

சரி மேற்சொல்லப்பட்ட 'காந்தியின் இந்தியா ' நூலில் அவர்கள் மொழி குறித்து கொடுத்துள்ளவற்றிலிருந்து , தேர்ந்தெடுத்த சில வரிகளைத் தந்துள்ளேன். தமிழ் அரசியல் சூழல் காந்தியின் வரிகளை ஏற்கவில்லை. இனியும் ஏற்குமா என ஊகிக்க முடியவில்லை. ஏற்பு நிராகரிப்பு என்பதை தாண்டி, அவர் என்ன நினைத்தார் - விரும்பினார் என இவ்வரிகள் கொஞ்சம் உணர்த்தலாம்.

The question of language presents a big and indeed a very important problem..Language is like our mother.

We cannot get the freedom we want through a foreign language.. we should see conditions are created when not a word of English will be heard in any of our provisional assemblies and the like. Let us abandon the use of English entirely ….do not consider for one moment that you can possibly make English a common medium of expression between the masses.

We want only that all should learn Hindi as a common medium for interprovincial intercourse. This does not mean that we have any undue partiality for Hindi. We regard Hindi as our national language. It is fit to be adopted as such…If Hindi takes the place of English, I for one would be pleased..knowledge of English is necessary for the acquisition of modern knowledge..but English can never become our national language.

If we want to make India one nation, whether one believes it or not, Hindi alone can be the national language for the simple reason that no other language can hope to have the advantages enjoyed by Hindi…

The cry of ‘ mother tongue in danger’ is ignorant or hypocritical …we must break through the provincial crust if we are to reach the core of all India nationalism. Is India one country and one nation or many countries and many nations?..

..if each province begins to look upon itself as a separate, sovereign unit, India’s independence will lose its meaning and with it all vanish the freedom of the various units as well..the world outside does not know us as Gujaratis, Maharashtrians, Tamilians etc, but only as Indians….

இந்தியாவில் வாழ்ந்த மனிதர்களில் மிகுந்த பொறுப்பும் கடமையுணர்வும் இந்திய மக்கள் அனைவரையும் நேசித்த மகத்தான மனிதரின் பார்வையிது. ஏற்கலாம்- நிராகரிக்கலாம். அவரின் பார்வை உண்மைக்கு அருகாமை செல்லவே விழையும். நேர்மையாக இருக்கும் என்கிற நம்பிக்கையை நாம் இழக்க வேண்டியதில்லை. கேட்கலாம் அல்லது மறுக்கலாம்.

21-2-2025

feb 22

பாரதி அறிஞர் ரா அ பத்மநாபன் அவர்கள் தொகுத்த பாரதி புதையல் 1 நூலை இணைய வழி பார்த்துக்கொண்டிருந்தேன். 1958 நவம்பரில் வந்த நூல். அதுவரை வெளிவராத பாரதியின் 11 கவிதைகள், 10 கதைகள், 6 கட்டுரைகள் தவிர மாதர் எனும் பகுதியில் இரு கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

இத்தொகுப்பில் இடம் பெற்ற கட்டுரைகளில் 5 வது கட்டுரை ' இந்தியாவுக்குப் பொது பாஷை' என்கிற தலைப்பில் இருக்கின்றது. இக்கட்டுரை ஒளி மணிக்கோவை என பாரதி எழுதி வந்த குறிப்புகளில் இடம் பெற்றதாகவும், முதலில் சுதேசமித்திரனில் , பிறகு 1942 ஜூன் கலைமகளிலும் வந்ததாக ரா அ ப குறிப்பு கொடுத்துள்ளார். இக்கட்டுரை பாரதி புதையல் 1ல் பக் 81-82 களில் உள்ள சிறிய கட்டுரைதான். அதில் பாரதியார் சொல்லியிருப்பதிலிருந்து இங்கு சில வரிகள்..

" இந்தியாவுக்கு பொது பாஷையாக ஹிந்தியை வழங்கலாமென்று ஸ்ரீமான் காந்தி முதலிய பெரியோர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் பாரத தேச பக்த சிரோரத்னமென்று கூறத்தக்க ஸ்ரீமான் அரவிந்தகோஷ் முதலிய வேறு பலர் ஸம்ஸ்கிருத பாஷையே இந்தியாவுக்குப் பொது பாஷையென்றும், நாம் அதை புதிதாக சமைக்க வேண்டியதில்லையென்றும், ஏற்கனவே ஆதி காலந்தொட்டு அதுவே பொதுப் பாஷையாக இயல் பெற்று வருகிறது என்றும் சொல்லுகிறார்கள்.

...... ஸம்ஸ்கிருத பாஷையில் படித்துத் தேர்ச்சி பெறுதல் கடினமாதலால் அதைத் தேச முழுமைக்கும் பொதுப் பாஷையாக செய்தல் சௌகரியப்படாதென்று சிலர் சொல்கிறார்கள். பழைய வழிப்படி படிப்பதானால் இவர்கள் சொல்வது ஒருவாறு மெய்யெனலாம். ஆனால் இக்காலத்தில் அந்நிலைமை கடந்து சென்றுவிட்டது. இப்போது பண்டாரகர் என்னும் பம்பாய் பண்டிதர், உபாத்தியாயர் இல்லாமலே ஸம்ஸ்கிருத பாஷையை ஏழெட்டு மாதங்களிலே கற்றுக்கொள்ளும்படியாக ஆரம்ப நூல்கள் எழுதியிருக்கிறார். முதல் புத்தகம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அவ்வழியை இன்னும் சுலபமாக கற்கலாம்.

பஞ்ச தந்திரத்தை அர்த்தத்துடன் மூன்று முறை உருப்போட்டால் எவனும் தட தடவென்று தட்டில்லாமல் ஸமஸ்கிருதம் பேசக்கூடிய திறமை பெற்றுவிடுவான்....

இந்தியாவிற்குப் பொதுப் பாஷையாக எதிர்காலத்தில் ஸம்ஸ்கிருத பாஷையே விளங்கப் போகின்றதென்று கண்டுகொண்ட மாத்திரத்தில் இந்தியா முழுமைக்கும் பொதுவான சங்கீதம் ஸம்ஸ்கிருத பாஷையிலே தான் அமைந்திருக்குமென்பது சொல்லாமலே விளங்கும் ....

(எனக்கு சமஸ்கிருதம் அறவே தெரியாது. ஒருமுறை corres சேர்ந்து வந்த material எதையும் தொடாமல் , அப்படியே மறைந்த தோழர் கார்த்தி வழியே திருவாரூரில் புகழ் வாய்ந்த டாக்டர் லட்சுமி நாராயணன் அவர்களிடம் கொடுத்து விட்டேன். இந்தி தெரியவில்லையே என தமிழ்நாடு தாண்டி பல மாநிலத்தில் நடந்த கூட்டங்களுக்கு போகும்போது மட்டும் கொஞ்சம் சங்கடம் வரும். முக்கியஸ்தர்கள் பேசும்போது ஆங்கிலத்திலும் பேசுவீர் என சத்தம் எழுப்பியவரில் ஒருவன். ஆனால் இந்த சங்கடம் போக்க இந்தி கற்க எந்த முயற்சியும் எடுத்ததில்லை. அ ஆ தெரியும். அவ்வப்போது அதுவும் மறந்துவிடும். எழுத்துக் கூட்டி படிக்கவே எனக்கு தாவு தீர்ந்து விடும் என்பது என் கதை. என் லட்சணம்)

22-2-2025

feb 23

மொழி பிரச்சனை குறித்து பலவற்றை தேடியபோது, மிக முக்கியமான ஒன்றை நான் உணர்ந்தேன். பா ஜ க திரு மோடி ஆட்சியில் The Report of Commissioner of Linguistic Minorities வெளியிடப்படவேயில்லை என்பது தான் என் தேடலில் எனக்கு கிடைத்த தகவல்.

Minority Affairs Ministry வெளியிட்ட ஆண்டறிக்கை ஆவணத்தையும் சரி பார்த்த பின்னரே, இந்த தகவலை பொதுவெளியில் நான் வைக்கிறேன். இது குறித்து ஆர்வலர், மாநில அரசாங்கங்கள் ஏதாவது எழுப்பினரா என என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

சிறுபான்மை மொழி கமிஷனர் அறிக்கை இதுவரை 52 மட்டுமே வந்துள்ளது. அந்த அறிக்கைகளை தேடியபோது என்னால் 2014-15க்கு பின்னரான எந்த அறிக்கையையும் எடுக்க முடியவில்லையே என குறைபட்டுக்கொண்டிருந்தேன். இருந்தால் தானே அது கிடைக்கும் என்ற உண்மையை தற்போது தான் உணர்ந்தேன். மோடி ஆட்சிக்கு வந்தவுடன் ஒரே ஒரு அறிக்கை தான் 2014-15 ல் வெளியாகியுள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக இந்த அறிக்கையை எதுவும் மோடி அரசாங்கம் வெளியிடாத கொடுமை நிகழ்ந்துள்ளது. இதை பொது வெளி விவகாரமாக மாற்றாமல் ஏன் மற்றவர் விட்டுள்ளனர் என்பதும் சங்கடத்தை தருகிறது.

2014-15ல் வந்த மொழி சிறுபான்மை கமிஷனர் அறிக்கைதான் 52 வது அறிக்கை. மோடிக்கு முன்னர் விடுதலை இந்தியா 52 அறிக்கைகளை பார்த்துள்ளது எனப் பொருள். இதில் மாநிலவாரியாக என்ன என்ன மொழிகள் பேசப்படுகின்றன, அப்படி பேசுவோர் அம்மாநில மக்கள் தொகையில் எவ்வளவு சதம், அலுவல் மொழி என்ன அல்லது எவை, மும்மொழி திட்டம் செயல்படுகிறதா, எவ்வளவு மாணவர்கள்- எவ்வளவு ஆசிரியர்கள் என பல்வேறு விவரங்களை தாங்கி , இந்த அறிக்கை கமிஷனர் ஒப்பத்துடன் வெளிவந்து கொண்டிருந்தது. நமக்கு இப்போது கிடைப்பது 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியான ஒன்றே. 2011 கணக்கெடுப்பு காலமே முடிந்து, அடுத்த கணக்கெடுப்பை நடத்து என்கிற குரல்கள் கேட்கத்துவங்கி விட்டது. 2020 புதிய கல்விக் கொள்கையும் வந்துவிட்டது. 2011 கணக்கெடுப்பில் 2023-24க்கு ஏதாவது விவரங்களை மாநிலங்களில் கேட்டு சேகரித்தார்களா என்பது கூட தெரியவில்லை. இதில் மத்திய மாநில அரசாங்கள் மௌனம் ஏனோ?

52 வது அந்த 2001 படியான 2014-15 அறிக்கையில் கிடைத்த விவரங்களையாவது ஆர்வமுள்ளவர் வாசித்து அறியலாம். இணையத்தில் கிடைக்கிறது. அதையும் ‘படம் கடைசி’ என தூக்கிவிடப்போகிறார்கள். பார்த்துக்கொள்வீர்.

மொழி என்பது ‘சூழல் மற்றும் கற்றல் வழி தான்’ தலைமுறை தலைமுறையாக மாற்றித் தரப்படுகிற ஒன்று. தானாக வரக்கூடிய மொழி என- தாய்மொழி தந்தை மொழி வேறு மொழி எதுவானாலும்- ஏதுமில்லை. சூழலில் ‘பார்த்தொழுகல்’ அல்லது கற்பித்தல்- கற்றல் வழிதான் மொழி ஒவ்வொருவரிடமும் வந்து சேர்கிறது. அவரவர் கவனக்குவிப்பு ஆர்வம் பயிற்சி பொறுத்து மொழித்திறன் அமைகிறது. மனிதர்க்கு எல்லாமே taught concepts தான். கற்பித புனிதக்கூட்டல்கள்தான். கடவுள் , தாய்மொழி , இசங்கள் என அனைத்தும் taught concepts தான். அவரவர் ஆரத்தி அவரவர்க்கு புனிதமானது.

மனிதச் சூழல் இல்லா நிலையில் மொழி கூடிவராது. அவரவர் தாய்மொழி என்பது அவரவர் சூழல் சார்ந்து கற்பித்தல் சார்ந்துதான் கெட்டிப்படுகிறது. தாய்மொழி இதுவென குடும்ப வழிப்படி சொல்லிவிட்டு, எழுத படிக்கத் தெரியாது எனச் சொல்லக்கூடியவர்களும் உண்டு. அது அவர்களின் புதிய சூழலால் நேரலாம். எனவே மொழி என்றாலே கொச்சையாக சொன்னால் திணிப்புதான். திணிப்பு பழகினால் தித்திக்கலாம். எதுக்கலித்தால் கசக்கலாம். தாய்மொழியிலும் கசப்பு இலக்கணம் என்பது நேராமல் இல்லை. மனித பழக்க வழக்கம் எல்லாமே ஒருவகை திணிப்புத்தான்.

பன்மொழி தேர்ச்சியாளர் சிலர் இருப்பர். மார்க்சின் கூட்டாளி எங்கெல்ஸ் பன்மொழி திறனாளர்தான். மார்க்சிற்கு லண்டன் வந்தபுதிதில் ஆங்கிலத்தில் கட்டுரை எழுதும் பயிற்சி இல்லாமலேயே இருந்தது. அவர் கருத்தை உள்வாங்கி எங்கெல்ஸ் தான் நியுயார்க் பத்திரிகைக்கு எழுதி அனுப்பினார். பின்னர் மார்க்சே தேர்ச்சி பெற்று எழுதலானார். தமிழகத்திலும் பன்மொழி திறனாளர் இருக்கின்றனர்.

மொழி என்பது கவனத்துடன் செய்யக்கூடிய பயிற்சி. அவரவர் ஆர்வம் என்பதை தாண்டி , சமுக பொருளாதார அரசியல் மற்றும் மதம் சார்ந்த தேவைகளுடனும் அது கட்டப்பட்டுவிட்டது. எவ்வளவு மொழி ஒருவர் கற்றுத் தேற வேண்டும் என்பதை அவரவர் முடிவெடுக்க வேண்டும். தாய்மொழியே ஆனாலும் வட்டார வழக்குகள் என சிறு வேறுபட்ட அனுசரிப்புகள் இருக்கவே செய்யும்.

மாணவர்க்கு கல்வி எனும் போது தான் மாநில அரசாங்க கொள்கை-மத்திய அரசாங்கக் கொள்கை எல்லாம் வந்து சேர்கிறது. இருமொழி கொள்கை, மும்மொழிக் கொள்கை என 1968 லிருந்து இரு திசைகாட்டிகள் நிற்கின்றன. இவை கொள்கை என்ற அளவிலேயே அமுலாகின்றன. அல்லது அமுல் படுத்த முடியாது என சொல்லப்படுகின்றன. பள்ளிக் கல்வியில் இருமொழி கொள்கைக்கும் சட்டமில்லை. மும்மொழிக் கொள்கைக்கும் சட்டமில்லை. அவை கொள்கைகள் கோட்பாடுகள். சட்டங்கள் அல்ல.

இருக்கிற சட்டமெல்லாம் மாநில அலுவல் மொழி சட்டம், மத்திய அலுவல் மொழி சட்டம் மற்றும் விதிகள் தான். கல்விக் கொள்கைக்கான மொழி சட்டம் என மாநில அரசோ, மத்திய அரசோ சட்ட மன்ற வழி , நாடாளுமன்ற வழி குடியரசுத் தலைவர் ஒப்புதலை பெற்று வரும் என்றால், அதை நீதிமன்ற தீர்ப்பிற்கு வழக்காட எடுத்துச் செல்ல வாய்ப்பு இருந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. Right to Education Act போல நாட்டிற்கான multi lingual act in schools என ஏதுமில்லை.

மக்களின் பேராதரவை தேர்தலில் பெற்று மாநில அரசாங்கம் தனது அரசியல் அமைப்பு சட்டப்படி பெற்ற அதிகார எல்லைக்குள் கொள்கை கொண்டு செயல்படுவதும், தேர்தலில் வென்று மத்திய அரசாங்கத்தை நடத்துபவர் அவரின் அரசியல் அமைப்பு சட்ட உரிமை எல்லைக்குள் கொள்கை கொண்டு செயல்படுவதும் , இன்றுள்ள முறையில் தவிர்க்க முடியாதவை. என் ஏரியா உள்ளே வராதே என்பது பொதுப் பட்டியல் அம்சங்களில் எடுபடுமா எனத் தெரியவில்லை.

இந்தக் கொள்கையை அமுல்படுத்தினால் தான் நிதி என்பதும் பிரச்சனையாகிறது. நிதி என்பது அந்தக் கொள்கைக்குரியது எனச் சொன்ன பிறகு , அதில் மாற்று கருத்து உடையவர் தான் வஞ்சிக்கப்படுவதாக நினைத்தால் நீதி மன்றத்தை அணுகி நியாயம் கோர முடியாதா- அது வழியில்லை எனக் கருதுகிறார்களா எனத் தெரியவில்லை. அரசியல் வழி, அல்லது நிர்வாக மொழியில் தீர்வு இல்லையெனில் நீதி மன்ற வழி ஏற்பில்லையா எனத் தெரியவில்லை.

சரி . பாஜக தமிழ் நாட்டில் இந்தியை அல்லது வேறு மூன்றாவது மொழியை கொண்டு செல்வது தான் தமிழ் மாணவர்களுக்கு எதிர்காலத்தை மேம்படுத்தும் எனக் கருதினால், அதை தானே முன் நின்று நடத்திக் காட்டலாமே. மரத்தடி இந்தி வகுப்புகளை தமிழ் மாணவர்களுக்கு, வாய்ப்புள்ள இடங்களில் இலவசமாகவும், மத்திய அரசிடம் எடுத்துசி சொல்லி அம்மாணவர்களுக்கு ஊக்கத்தொகை கொடுத்து கற்பிக்கலாமே. ஆர்வம் எவ்வளவு பேர்களுக்கு இருக்கிறது

என்கிற நடைமுறை சோதனை வழி நிருபித்துக் காட்டலாமே. அல்லது தமிழ் நாட்டு மாணவர்களுக்கு இந்தி கற்பிக்க தனி சானல் , விளையாட்டு பொழுது போக்கு அம்சங்களுடன் நடத்தலாமே.

எவ்வளவோ constructive ஆக செய்ய இருக்கும்போது, ஓர் அடி கூட எடுத்து வைக்காமல், அரசியல் மோதல்களில் அக்கட்சி பொழுது போக்குவதால் மாணவர் திறனை உயர்த்த வியலாது. எதைப் பேசுகிறோமோ அதற்கான முன்னுதாரணமாக இரு - exemplariness என்கிற காந்திய சிந்தனை தான் டன் கணக்கான பேச்சுக்களை விட காரியார்த்தமாக இருக்கும் என்பது உணரக்கூடப்படாமல் இருப்பதுதான் வேதனை.

23-2-2025

feb 25

Com S S Gopalakrishnan, affectionately called by his friends and comrades as SSG turns 70 on Feb 26, 2025.

In my youth days, I was enthralled by the charm of two youngsters of my age group in our movement. One is Ramadurai of Tiruvarur and the other is SSG of pollachi. I felt them as the handsome , charming MGRs or Kamalhasans. Ramadurai பரோபகாரி from his youth days , is also crossed 70 and doing immense service to the needy friends.

Com SSG has his own chequered pages in the history of Telecom Trade Union movement. A charm and inspiring personality emerged from Coimbatore area, organised thousands of employees in his own style and led the great NFTE.

He had reached his heights to the level of all India Secretary in that movement, from the scratch of branch secretary at pollachi, served at Delhi in his retiring years with his comrades in arms.

A known and fond leader of many, he focused all his ability and used his flowery language to settle the issues of labourers. His skill at the negotiating table was witnessed by many of his close associates.

His association with almost all the tallest leaders of the trade union movement , with all his personal touch helped him to understand the issues of working class not only in his area but throughout Tamil Nadu and India. It is almost a fact tested , that many who befriended him, keep that comradeship with him, as his social nature attracts all.

A man never fail to spend his money for the friends and always a host of fantastic lovable nature. He has the conviction and art of calling a spade a spade, and is very frank in his opinions, to the core outspoken, neither spare friends nor adversaries.

He never hate anyone and love all, but in his own inimitable style keeps that mode of critical appreciation. No blind supporter of anyone, nor a blind critic of anyone. His brilliance of understanding any issue or the day to day politics is awesome. He never gives up his ‘left mind set’ and humanism , of course expands that with broad understanding .

His family values him as lovable husband, wonderful father , fine brother of his siblings.

Let him take care of his health. Let him live long and serve in his own way to the society that we live in. My wishes to him and his lovably affectionate family. Hope comrades shower their wishes to com SSG

25-2-2025

feb 26

A greedy thought

Yesterdays' liberators today's oppressors. Wherever goes 'Tenali fear' . Let the world be reconstructed from the fear of God and Government. Oh I forgot. Let it also be reconstructed from the fear of police and threat of party bosses of any level equally.

-Com Namari

feb27

இருப்பது அதன் உருவில் இல்லாமல் போவது உயிரின் இயற்கை. நேற்று இருப்பவர் இன்று இல்லை என்கிற உலக இயல்பை அனைவரும் அறிந்த பின்னரும், அது கிடக்கட்டும் என்ற ஆட்டமே மானுட இயல்பாகவும் அமைகிறது. பாலம் வரும்போது தாண்டிக்கொள்ளலாம் என்கிற சமாதானத்தை மனம் சாமர்த்தியமாக செய்துவிடும். அந்த ஊருக்கு போனால் அந்த மொழியை கற்கப் போறோம், இப்ப எதுக்கு என்பது போல. ஆனால் இங்கிலிஷ் அப்படியில்ல. டெய்லி கற்றுக்கொள்ள வேண்டும். பிறந்தவுடன் ஆரம்பிக்கவேண்டும்.

காலந்தோறும் முக்கியஸ்தர்கள் மாறிக்கொண்டேயிருப்பார்கள். நேற்றைய முக்கியஸ்தர் வேறு. இன்றைய முக்கியஸ்தர் வேறு என்பதுதான் வாழ்க்கை கடத்தும் பாடம். சூழல் முக்கியஸ்தர்களை தேர்ந்தெடுக்கிறது. ஆராதிக்கிறது. பின்னர் மாறுபட்ட சூழல் புதிய முக்கியஸ்தரை தேடுகிறது. இதில் எல்லாம் வரவு செலவு வகையான கணக்குகள் இல்லாமல் இருப்பதில்லை.

காலம் காலமாக நான் தானே முக்கியஸ்தர் என எவரின் உரிமைக்கோரலையும் வாழ்க்கை நிராகரித்து விடுகிறது. புதிய மோடிக்கள்- டிரம்ப்கள் என முக்கியஸ்தர்கள் ஆங்காங்கே முளைத்து விடுகின்றனர்.

தமிழ் மொழி, சமஸ்கிருதம் போன்றவை 5000 ஆண்டு பழமையை சொல்லி , உலக முக்கியஸ்தம் எனக்கே எனக் கேட்டாலும் உலக நாற்காலியை ஆங்கிலம் என்கிற 1500 ஆண்டுகளான மொழி சிம்மாசனமாக்கிக் கொண்டு விடுகிறது.

5000 ஆண்டுகளாக ஏன் ஊருக்குள்ளேயே உட்கார்ந்திருந்தாய், என்னை மாதிரி உலகை காலனியாக்கி இங்கிலாந்திலும் அய்ரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தேசமொழி ஆகாவிட்டாலும் , எனக்கு இணையான அலுவல் மொழியாக கூட ஆகாமல் போய்விட்டாயே சம்ஸ்கிருதம் மற்றும் தமிழே என ஆங்கிலம் கேட்பது போல் இருக்கிறது. என்ன சோழர் சேர பாண்டியர்கள்.. கிளைவ் வாரன்ஹேஸ்டிங்கிற்கு ஈடாக முடியாமல்..

5000 ஆண்டுகளாக வாழும் தமிழே , உலகம் முழுக்க இன்று வாழும் 600 கோடியில் 50 கோடி மக்களை தமிழ் உயிர்க்கு நேர் என சொல்ல வைத்திருந்தால், எங்கேயோ நீ போய் இருப்பாயே. 2023ல் இங்கிலிஷ் அறிந்தோர் 140 கோடியாம். சீனா மண்டாரின் 113 கோடி, இந்தி 60 கோடி, ஸ்பானிஷ் 56 கோடி, பிரஞ்சு 31 கோடி, அரபு 27 கோடி, வங்கம் 26

கோடி, போர்ச்சுகீஷ் 26 கோடி, ருஷ்ய 26 கோடி, உருது 23 கோடி. தமிழ் அறிந்த மக்கள் 9 கோடி . உலகில் நீ போக வேண்டிய தூரம் அதிகமில்லையா தமிழே. சில ஆயிரம் பேர் மட்டுமே அறிந்த சம்ஸ்கிருதம் உன்னை விரட்ட முடியுமா தமிழே. இந்தி ஏகாதிபத்தியம் போல, சமஸ்கிருதத்தால் பாவனை கூட செய்ய முடியாதே.

உலகம் முழுக்க மனிதர்கள் ஆங்கிலத்தை புரிந்து கொள்வார்கள், எனவே என் தமிழன் உலகின் மூலை முடுக்கெல்லாம் இங்கிலீசில் புகுந்து புறப்பட்டு வந்துவிடுவான் என்கிற பெரும் நம்பிக்கையை காலனியம் நன்றாகவே ஊன்றி சென்றுவிட்டது. ஊரெல்லாம் இங்கிலீஷை மணக்க வைக்கும் பெரிய மனசு நம் பெரும் தமிழ் அணங்கிற்கு. இங்கிலீஷ் காலனியம் போதும், இந்தி காலனியத்தை ஊருக்குள் நுழைய அனுமதிக்க மாட்டோம் என பெரும் புறநானூறு புறப்பாடுகள்.

கான்வெண்ட் டிரஸ் மாட்டி, தாட் பூட் இங்கிலிஸ் பேசுவதை பார்த்து மகன் மகளுக்கு கன்னத்தில் திருஷ்டி பொட்டு வைக்க, எங்க ஊர் அம்மாக்களை செய்துட்டுயே ஆங்கிலமே. கோடானு கோடி தமிழரை , அவர் ஊரை தாண்டாமல் போனாலும், ஒண்ணாம் கிளாசிலேந்து இங்கிலிஷ் படிச்சு பெரிய ஆபிசரா, கலெக்டரா வந்துடு, நல்லா சம்பாதித்து பெரிய மனுஷனா வா என ஊர் பெரியவர்கள் வாயெல்லாம் சொல்ல வைச்சுட்டியே இங்கிலீஷே. உன் சீரிளமைத் திறன் வியந்து வாழ்த்துதுமே... தமிழன் இங்கிலீசை வாழ்த்துதுமே.. இந்திய ஒருமைப்பாட்டை விஞ்சிய உலக ஒருமைப்பாட்டை கொணர்ந்த இங்கிலீஷே உன்னை வாழ்த்துதுமே

சின்ன வயசுலே பிள்ளையார் முன் நின்று சங்கத் தமிழ் தா என பாடச் சொன்னார்கள். அப்போது பாடியதற்கே அவர் இன்னும் தரவில்லை. ஆனால் ஆண்டுதோறும் ஆறுதலுக்காக கொழுக்கட்டை தந்து விடுகிறார். அப்புறம் என்ன..

27-2-2025

feb 28

மறைந்த தேவி பிரசாத் அவர்கள் காந்தி குறித்து எழுதிய கட்டுரைகளின் தொகுப்பை, அவர் மறைந்தவுடன் (ஜூன் 2011ல் அவர் மறைந்தார்) 2012ல் கொணர்ந்தனர்.

சொற்செட்டுடன் செறிவாக தேவி பிரசாத் பல்வேறு நாடுகளில் பல்வேறு தருணங்களில் பேசியவை 'Gandhi and Revolution' என்கிற தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. புகழ் வாய்ந்த சிந்தனையாளர் அகில் பில்கிராமி முன்னீடை சுருக்கமாக தந்துள்ளார். தேவி காந்தியுடன் பழகி பயணித்தவர்களில் ஒருவர். தேவி பிரசாத் தாகூர் காந்தி கல்வி சிந்தனைகளை ஒருமுகப்படுத்தி நூல் எழுதியவரும் கூட.

இந்நூலில் இரு கட்டுரைகளை மட்டும் தொட்டு அறிமுகப்படுத்த விழைகிறேன். ஒன்று Gandhi A Historical Necessity, மற்றொன்று Lenin and Gandhi A contemporary Revolutionaries.

'காந்தியும் புரட்சியும்' என்கிற இந்நூலில் 12 கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன. காந்தி என்றாலே அனைவரும் பேசக்கூடிய சில முக்கிய கருத்தாக்கங்கள், போராட்ட வழிகளை தேவி பிரசாத்தும் அவர் உள்வாங்கிய அடிப்படையில் அழகாக இதில் வெளிப்படுத்துகிறார். ஒத்துழையாமை, சத்தியாகிரகம், அகிம்சை, விடுதலை என்றால், கல்விப் புரட்சி, சிறுபான்மையினர் தோழமை போன்ற பல அம்சங்கள் நூல் நீள விவாதிக்கப்பட்டுள்ளன.

175 பக்கங்களே உள்ள சிறிய நூல்தான். ஆனால் நிதானமாக நம்மை படிக்க வைக்கிற ஆற்றல் கொண்ட எழுத்து முறை. Gandhi a Historical Necessity என்கிற கட்டுரைதான் சற்று பெரிதானது. இத்தாலி மிலான் அருகே காந்தி குறித்த work shopல் 1981ல் தேவி பிரசாத் வைத்த கருத்துக்கள் இக்கட்டுரையானது.

அதிகாரத்தை, தேசிய இயக்கங்களை, விவசாயத்தை, தொழிலை, கல்வியை, சமுக ஒன்றிணைந்த வாழ்வை பிரிட்டிஷ் இந்தியா எந்நிலையில் வைத்திருந்தது, முன்னர் இருந்த நிலைமைகளை எப்படியெல்லாம் சீரழித்தது- இச்சூழலில் காந்தியின் வருகையும் அவரது சிந்தை செயல்கள் இந்திய முகத்தை மாற்றிட எப்படி உதவின என்கிற ஆய்வாக 'காந்தி என்கிற வரலாற்று அவசியம்', மிலான் அருகே சிற்றூர் ஒன்றில் தேவியால் பேசப்பட்டுள்ளது. காந்தியின் 'இந்திய சுயராஜ்ய' எழுத்தை தேவி இத்தாலியர்களிடம் விரிவாக எடுத்துச்

சென்றதைக் காணமுடிகிறது. நவீன அய்ரோப்பிய நாகரிகத்தின் கோரத்தை மனித விகாரத் தன்மையை தேவி காந்திய மொழியில் அங்கு எடுத்து வைத்துள்ளதைக் காண்கிறோம்.

காந்தியின் மக்கள் திரள் போராட்டங்களையும் இத்தாலியினரிடம் தேவி விரிவாக விளக்குகிறார். இந்த கட்டுரை இப்படியான வரிகளுடன் முடிகிறது

If people develop use of a weapon which cannot be taken away from them , they can never be enslaved. That weapon is Satyagraha, and that is the real power of the people. ஹிட்லரிய பாசிஸ்ட்களுக்கு எதிரான போராட்டமாக யூதர்கள் உள்ளிட்டவர்க்கு காந்தி கூறியது நினைவிற்கு வரலாம்.

இந்நூலில் மற்றொரு சுவையான சிறிய கட்டுரை இருக்கிறது. 1970ல் யுகோஸ்லேவியா இதழுக்காக தேவி எழுதிய கட்டுரை Lenin and Gandhi - Contemporary Revolutionaries . காந்தி யங் இந்தியா நவ 15, 1928ல் லெனின் குறித்து தெரிவித்த வரிகளை தேவி எடுத்தாண்டுள்ளார்

....there is no doubt that behind the Bolshevik ideal, there is the purest kind of sacrifice of numberless men and women who have devoted everything to it. It is an ideal which has been strengthened by great men like Lenin by their own sacrifice. The example of Lenin’s sacrifice cannot go in vain, it will always remain like a beacon and with time it will give the ideal greater purity and momentum.

இங்கு காந்தி லெனினை பாராட்டிவிட்டு, அது காலம் செல்ல செல்ல greater purity momentum பெறட்டும் என்கிற தன் பார்வையையும் வைக்கிறார்.

தேவி , லெனின் காந்தி இருவரிடையே ஒப்பிட முடிந்த இடங்கள், மாறுபடும் இடங்களை சுருக்கமாக இதில் சொல்லியிருப்பார். Parallels-unparalles என இருவரையும் தேவி ஒப்பிட்டு பேசியிருப்பார். 55 ஆண்டுகளுக்கு முன்னர் தேவியிடம் இருந்த தகவல்கள் அடிப்படையில் பேசப்பட்டுள்ள விடயங்கள் என்கிற புரிதலும் அவசியம். இருவரின் இலட்சிய சமுக கனவு சிந்தனைகள் ஒப்பிடப்பட்டு, அடைகிற வழி முறைகளின் மாறுபாடுகள் சொல்லப்பட்டிருக்கும் கட்டுரையிது.

மிக முக்கிய கருத்தாக்கம் ஒன்றை தேவி இதில் தந்திருப்பார். லெனினுக்கு கட்சி தான் எல்லாம். அதை புரட்சிக்கான அடிப்படை கருவியாக, புரட்சிக்கு பின்னரான கட்டுமானத்திற்கு அதைப் பலப்படுத்தி வலுவான கட்சியாக மாற்றும் , லெனினின் கட்சி குறித்த சிந்தனையை தேவி பிரசாத் சுட்டிக்காட்டியிருப்பார். இந்த கட்சி தலைமையில் புரட்சி, எனவே கட்டுமானத்திற்கு அதைவிட பன்மடங்கு

பலமான கட்சி அமைப்பு என்றே லெனின் சிந்தனை செயல் அமைந்தது. மாவோவும் இதே வழிதான் சென்றார். அநேகமாக அனைத்து புரட்சிகர அமைப்புகளும் இதே வழியைத்தான் தேர்ந்தெடுத்தனர்.

ஆனால் காந்திக்கோ கட்சி என்பதெல்லாம் absolute entity அல்ல. காந்தி காங்கிரசுடன் பயணித்தார் என்பதைவிட, காங்கிரஸ் விடுதலை புரட்சி காலத்தில் காந்தியுடன் பயணித்தது என்பதே என் புரிதல் . ஏனெனில் காந்தி மக்களுடனும் , மக்கள் வேறு எவரையும் விட காந்தியுடனும் பயணித்தனர். இங்கு தேவி காந்தி முன் வைத்த துணிச்சலான, வேறு உலகின் எந்த இயக்கமும் முன் வைக்காத , ஒன்றை வெளிப்படுத்துகிறார். விடுதலைக்குப் பின்னர் காங்கிரஸ் கட்சியை கலைத்து விட்டு அதை சேவைத் தொண்டர்கள் அமைப்பாக மாற்றி விடுவீர் என்கிற அறிவுரையை காந்தி முன் வைத்தார். மகா துணிச்சல்.

விடுதலைக்குப் பின்னர் அதிகாரத்தை, போராடியவர்கள் சுவைக்கும் போது ஏற்படும் ஆபத்தை காந்தியைப் போல் உலகில் உணர்ந்தவர் எவரும் இல்லையோ? ‘நேற்று விடுதலையாளர்கள் தான் இன்று ஒடுக்குமுறையாளர்கள் ‘ என்கிற பெரும் செய்தியை காந்தியைப் போல் உள்வாங்கி செரித்துக்கொண்டவர் எவரும் இல்லை.

எவர்கள் அதிகார மாற்றத்திற்காக விடுதலைப் படையில் சர்வ தியாகமும் செய்து போராடினார்களோ , அவர்கள் அதிகாரத்தைச் சுவைக்காமல், தொடர்ந்து தொண்டர்களாக சேவையை தியாகத்தை முன்னெடுக்க வேண்டும் என்கிற பெரும் சிந்தனை புரட்சியை காந்தி முன் வைத்தார். காங்கிரஸ் தலைமை கண்டுகொள்ளவில்லை. அது லெனின் போன்றோர் வழியே, அதிகார வழியில் புதிய கட்டுமானம் எனச் சென்றது வேறு கதை.

இதைத்தான் லெனினியம் எப்போதும் ‘வேன்கார்டிசம்’ எனச் சொல்லிக் கொடுத்தால், காந்தியோ ‘exemplariness’ எனச் சொல்லித் தருகிறார் என அகில் பில்கிராமி தொடர்ந்து பேசி வருவதைக் காண்கிறோம்.

தேவியின் இந்த சிறு நூல் அடர்த்தியான கருத்துச் செறிவுகளை கொண்ட நூல்.

28-2-2025